திருத்தம்

பக்கம் 17 வரி 10


JL

RE m211, M18G

M27 · 17·10,

210814

Registered No. M. 2095.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 MAY 1927
MADRAS

# ஞானோதயம்.

பிரம்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரிகம், முதலிய
உயர்நல விஷயங்களைப் பரவச்செய்யும் ஓர்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி 17 } 1927-ஞு ஏப்ரல்-மீ 11உ { பகுதி 10

பொருளடக்கம்.

1. சகோதரத்வ பிரார்த்தனை ... 263
2. குறிப்புகளும் சமாசாரங்களும் .. 263
3. பிரம்மஞான சங்கம் தற்கால இந்தியாவிற்கு ஆவசியகம்
(மா. வெ. நெல்லையப்ப பிள்ளை) ... 268
4. பிரம்மஞானியின் சித்தவிருத்தி (அதிருசிய லோகம்) பிஷப்
லெட்பீடர் அவர்கள் உபந்யாசம்
—(பத்திராதிபர் மொழிபெயர்ப்பு) ... 271
5. ஷை ஜனங்கநோக்கம் ஸர்வஜனங்கநோக்கம் C. ராமய்யா ... 274
6. திவ்யஞான ஸாரம்—A. இராமஸ்வாமி சாஸ்திரி ... 283
7. தியானக்கிரம விஷயம்—K. S. இராமச்சந்திரய்யர் ... 287

பத்திராதிபர்—V. இராமச்சந்திர நாயுடு, ஏனங்குடி.
தஞ்சாவூர் ஜில்லா.

சந்தா விபரம்:—

வருஷ சந்தா உள்நாடு ரூ 1—0—0, வெளிநாடு ரூ 1—8—0,
தனிப்பிரதி ரூ 0—2—0.

போளம் ஸ்ரீ இராமச்சந்திரா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

# பத்திராதிபர் வேண்டுகோள்.

நமது சந்தா நேயர்கள், வருஷ சந்தாவை முன் பணமாகச் செலுத்தியே பத்திரிகையைப் பெற்றுக்கொண்டு ஆதரித்து வருகிறார்களாயினும், பத்திரிகையை ஏற்றுக்கொண்டு ஆதரிக்கத் தக்கவர்களென்று எங்கள் மதிப்பிற்பட்ட சில கனவான்களுக்கு நாங்கள் சென்ற 9 மாதங்களாக பத்திரிகை அனுப்பிவருகிறோம். அத்தகைய அபிமானிகளான நண்பர்கள் வருஷ சந்தா ரூ 1-ம் தயவுசெய்து உடனே மணியார்டர் மூலம் அனுப்பவேணுமாய்க் கேட்டுக்கொள்கிறோம். இச்சிறு தொகையைப்பற்றி அவர்களுக்கு அடிக்கடி ஞாபகப்படுத்தவேண்டியது அவசியமில்லையாயினும், ஏற்கனவே 2, 3, தடவை தெரிவித்துக்கொண்டும், அவர்களில் மிகச் சிலரே சந்தாவை மணியார்டர் செய்ததால் பாக்கியுள்ள நண்பர்கள் இதை கவனித்து சந்தாவை அனுப்பிவிடுவார்களென்று நம்பி மறுபடியும் தெரிவித்துக்கொள்ளலானோம்.

பத்திராதிபர்.

---

## புஸ்தக வரவு.

### 1 அஹிம்ஸா பரமோதர்ம

ஸ்ரீமான் ராம சுப்பிரமணிய நாவலர் அவர்களால் எழுதப்பட்டது. கிடைக்குமிடம்:—"விசாலஹிருதயம்" ஆபீஸ், பத்மநாபபுரம், தக்கலை P. O. விலை அணா 2. தேவையுள்ளவர்கள் 2½ அணாவுக்குத் தபால் ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வுயர்ந்த விஷயத்தைப்பற்றி யாவரும் சுலபமாய்ப் படித்தறியும்படி எளிய தமிழ் நடையில் நன்றாய் எழுதப்பட்டிருக்கிறது. யாவரும் வாங்கி வாசித்துப் பயனடைவார்களென்று நம்புகிறோம்.

### 2. பர்த்ருகரியார் சரித்திரம்.

இஃது எட்டயபுரம் மகா-௱-௱ஸ்ரீ கடிகை நமசிவாயப் புலவர் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு முன் அச்சிட்டிருந்தபடி ஷையார் மருகர் புலவர் ஷண்முகம் பிள்ளை யவர்களால் பதிப்பிக்கப் பெற்றது. விலை அணா 4. தேவையுள்ளவர்கள், மதுரை தெற்குக்கோபுரவாசல் தெரு, மீனலோசனி அச்சியந்திரசாலை மனேஜிங் புரோப்ரைட்டர் ஸ்ரீமான் அ. முத்துஸாமி பிள்ளை யவர்களுக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்

இந்த திவ்ய சரித்திரம் அழகிய செய்யுள் ரூபமாய் எழுதப்பட்டுள்ளது. தமிழபிமானிகளான அனைவரும் வாங்கிப் படித்துப் பயனடைவார்களென்று நம்புகிறோம்.

பத்திராதிபர்.

# ஞானோதயம்.

## பிரம்மஞான மாதாந்தப் பத்திரிகை.

தொகுதி 17 | 1927-ளு ஏப்ரல்-மீ 11உ | பகுதி 10


## சகோதரத்வப் பிரார்த்தனை.

அணுத்தொறுங் கரந்தே, நிறைந்திலகுயிரே !
ஆருயிர் தோறுங் கரந்திலங் கொளியே !
அனைத்தையும் ஒன்றாயிணைக்கும் உள்ளன்பே !
நின்னுடன் தானும் ஒன்றென வுணரும்,
அத் தன்மையினால் தானும் மற்றெவரும்,
ஒன்றே யென்னு முண்மை யுணர்கவே !

## குறிப்புகளும் ஸமாச்சாரங்களும்.

டாக்டர் அன்னிபெஸண்டு அம்மாள் அவர்கள் சென்ற ஜனவரிமீ 14உ, அமெரிக்காவில் வெளியாகும் லாஸ் ஆஞ்சலிஸ் எக்ஸாமினர் என்ற பத்திரிகையில், ஸ்ரீஜகத்குரு இப்பொழுது இங்கு இருக்கின்றார் என்ற மகுடமிட்டு ஓர் சுப ஸமாச்சாரத்தைப் பிரசுரித்தார்கள். அப் பத்திரிகைக்கு 10, 12 லக்ஷம் சந்தாதாரர்களிருக்கிறார்கள். அப்பத்திரிகையின் துவாரா இந்த லக்ஷக் கணக்காய்ப் படிப்பவர்களுக்கு இந்த ஸமாச்சாரம் எட்டிற்று. அப்பிரகடனத்தின் முக்கிய பாகம் தெலுங்கு திவ்யஞான தீபிகையில் வெளியானதை இங்கு மொழி பெயர்த்து வரைகின்றோம்:—

பூர்வ காலத்தில் பிரபஞ்சமெங்கும் துக்கமே அதிகமாய் வியாபித்து இருந்தமையால், அக்காலத்திய ஞான உபதேசமெல்லாம், துக்கமுடையவர்களுக்கு அனுபவிக்கக்கூடியதாகவே அளிக்கப்பட்டது. அக்காலத்திற்கு அதுவே பொருத்தமா யிருந்தது. ஆத்ம ஞான நிஷ்டையெனின், சுகத்தினின்று ஒழிதல், துக்கங்களையே வரித்தல் என்ற லக்ஷியமாய் வெளியிடப்பட்டது. ஸாமான்ய ஜனங்களின் ஜீவியம் மிகவும் கஷ்ட ஜீவியமாக விருந்தது. வயிறு நிறைய அன்னமில்லாமல், கட்டத் துணியில்லாமல், நோயால் பீடிக்கப்பட்டவர்களாகி, பலவந்தர்களால் பலவிதங்களில் பீடிக்கப் படுபவர்களாகி காலத்தைக் கழித்து வந்தார்கள் தனவந்தர்கள், பலவந்தர்கள், கடினமுள்ளவர்களாயும் ஹிம்சை செய்பவர்களாயுமிருந்தார்கள். அவ்வித சமயத்தில் ஸன்னியாசமே ஆத்ம ஞான நிஷ்டைக்கு மார்க்கமாய் எண்ணப்பட்டுப் போதிக்கப்பட்டது.

மேலும் தேஹேந்திரியங்கள் ஜீவாத்மாவிற்கு சத்துருக்களெனவும், அவைகளை க்ஷீணிக்கச் செய்து ஹிம்ஸித்து தலையெடுக்காது செய்தலே கடைத்தேறும்மார்க்கமெனவும் வற்புறுத்தி போதித்து வந்தார்கள்.

இப்பொழுது மேற்கு தேசங்களில், முக்கியமாய் அமெரிக்காவில் வெளிஸ்திதிகள் பூர்த்தியாக மாறின. ஸாமான்ய ஜனங்கள் கூட ஏகதேசம் நல்ல ஸ்திதியிலிருக்கிறார்கள். இஹ சுகத்தை அனுபவிக்கக் கூடியவர்களா யிருக்கிறார்கள். லோகாயதர்களான பண்டிதர்கள் பிரபஞ்ச பரிணாமம் முடிவற்றதென்றும், தர்மம் ஸநாதனமென்றும் தவிர்க்கப்படாதவை யென்றும் பௌதீக சாஸ்திர மூலமாகவே வேண்டிய அளவு கிரஹித்து, பகவானுடைய ஆத்தரமெனும் பாவத்தையே நிராகரித்து, மனிதன் தர்மானுஷ்டானத்தால் பரிபூரணனாகி அமிர்தத்வத்தை ஸாதிக்க ஸாத்தியமென்றும் எண்ணிக்கொண்டு யேசு கிறிஸ்து முதலாயுள்ள அவதார புருஷர்களின் ஜீவிதத்தை அனுஷ்டிக்க நிச்சயித்திருக்கின்றார்கள். இங்கு இவ்விதமிருக்க, ஏனைய பச்சிமதேசங்களில் இக்காலத்திய வெளிஸ்திதிகளுக்கு அனுகுணமாய் பாரமார்த்திக தர்ம விஷயமாய் நூதன ஸமாசாரத்தையளித்து, மதத்தையும் புனருத்தாரணம் செய்யக்கூடியவர்கள் கிடைப்பார்களா வெனத் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். வெளிப் பிரபஞ்சமும், பகவத் தத்வமும் பரஸ்பர முரண்களா? பகவான் ஆனந்த ஸ்வரூபர். அனுதாபமுள்ளவரே ஒழிய ஆக்கிரஹ ஸ்வரூபரன்று. இவ்வாறிருக்க சிருஷ்டியில்



சௌந்தரியம், ஸந்தோஷம், பிரகாசம், மஹிமை இவைகள் பகவானுடைய விபூதி ஐசுவரியங்களை வெளிப்படுத்துபவைகளேயன்றோ! பகவத் ஸாக்ஷாத்காரத்திற்கு விரோதங்களாய்க் காணப்படாவல்லவா?

போதகாசிரியர் இப்பொழுது இவ்விடமே யிருக்கிறார். அவரது ஸமாச்சாரமென்னவெனின், "ஆத்ம ஸாம்ராஜ்யம் ஆனந்த ஸாம்ராஜ்யமே. அந்த ஆனந்த ஸாம்ராஜ்யம் இஹத்திலேயே, உங்களிடமே யிருக்கின்றது" என்பதே. ஆனால் அந்தரங்கத்திலுள்ள ஆனந்த ஸாம்ராஜ்யத்தை வெளிப்படையாகச் செய்யவேண்டும். பகவான் ஆனந்த ஸ்வரூபியென வெகுகாலமாய் நான் நம்பியிருக்கிறேனபடியால், ஆத்ம ஸாம்ராஜ்யம் இஹ சௌக்கியத்தின் துவாரா, ஸந்தோஷத்தின் துவாரா, சௌந்தரியத்தின் துவாரா அனுபவிக்கத்தகுமென அழுத்திச்சொல்லும் ஸமாச்சாரத்தைக் கேட்கக் கேட்க நான் ஆனந்தத்தில் தாண்டவமாடலானேன். இஹ ஐசுவரியம் அமிதமாய்ப் பொங்கும் இக்காலத்தில் இந்த நூதன ஸமாச்சாரம் மிகவும் யுக்தமானதென எனது பலமான நம்பிக்கை. ஏனெனில், அவ்விதமில்லாவிடின், இக்காலத்திய ஐசுவரியம், பிரகிருதிசக்திகளை ஜயிப்பதின் துவாரா மனிதனுக்கு ஏற்பட்டிருக்கும் அபாரமான ஸாமர்த்தியம், பாரமார்த்திகத்தை தலையெடுக்காமல் செய்து நிர்மூலம் செய்துவிடும். ஆனது பற்றி ஸ்ரீ ஜகத்குரு "இஹ சுகம் ஆன்ம ஸாக்ஷாத்காரத்திற்கு ஸாதனம்" என்னும் நூதன ஸமாச்சாரத்தை அளிக்கவந்திருக்கிறார். உலகத்தை உத்தாரணம் செய்வதற்கு வேறு மார்க்கமில்லை.

பூர்வம் ஸ்ரீ ஜகத்குரு பாலஸ்தானத்தில் அவதரித்தபொழுது "நாஜரெத்து கிராமத்தில் பிறந்த ஜீஸஸ்" என்னும் மனிதன் மீது ஈசுவரகளை அவதரித்து ஆவேசமாயிற்றென நம்பினார்கள். அவ்வாறே இப்பொழுதும், அந்த ஈசுவரகளையே கிருஷ்ணமூர்த்தியென்னும் மானிட வியக்தியின்மீது அவதரித்தது. கிருஷ்ணமூர்த்தியின் ஜீவிதத்தை யறிந்தவர்கள், அவரது பிரவர்த்தனம் பூரண வெளித்தோற்றமுடையதாய் ஆயிற்றென அழுத்தமாய்ச் சொல்லக்கடவார்கள்.

1925-ம் வருஷ டிஸெம்பர் மீ 28உ யன்று ஸ்ரீ ஜகத்குரு கிருஷ்ணஜி அவர்களின் வாக்கால் 7000 பேர்கள் பாரதீயர்களுக்கு ஸமாச்சாரத்தை யளித்தார். அன்று முதல் கிருஷ்ணமூர்த்

தியிடம் அதி விரைவாக மாறுதல்கள் ஏற்பட்டுவருகின்றன. அக்காரணத்தால் அவரது பூர்வ பால்ய சங்கோசமும், கூச்சமும் ஒழிந்தன; வீர்யம், அதிகாரம், கம்பீரம் ஜ்வலிக்கின்றன. முன்னர் அவரைப் பார்த்தவர்கள் இப்பொழுது பார்த்து இப்படி மாறுதலை ஆச்சரியமென நினைக்கின்றார்கள்: சென்ற வருஷத்தில் ஆம்மென் கூட்டத்தில் அப்போதைக்கப்போது ஸ்ரீ ஜகத்குரு அவர் வாய் மூலமாய்ப் பேசினார்,

அப்பால் 1926ஆம் டிஸம்பர் 28உ யன்று ஒரு சிறு கூட்டத்தில் மஹாப் பிரபு அவர் வாயால் வசனித்தார். 1927ஆம் ஜனவரி 11உ யன்று தாரக ஸ்ரோதார்கள் 200 பெயர்கள் கூடியிருக்கையில் மஹாப் பிரபு அவர் வாக்கால் ஸம்பாஷித்தார். அந்த மனோஹர கண்டத்தொனியை எங்களில் சிலர் முந்தி கேட்டிருந்தமையால் தக்ஷணம் குறிப்பிட்டறியக் கூடியவர்களாயிருந்தோம். முந்தி ஒன்று இரண்டு வாக்கியங்கள் மாத்திரமாய்க் கேட்கப்பட்டு வந்த அக்கம்பீர கண்டஸ்வரம் அந்த தினம் பிரசங்கம் பிரபுவினிடமிருந்து வருவதாகவே செவிக்குப்பட்டது. பேச்சுக்கள் ஞானத்தால் நிறைந்து கம்பீர அதிகார முறையோடிருந்தன. கேட்டவர்கள் நிச்சலன முள்ளவர்களாய் நிசப்தமாய்க் கேட்டார்கள். ஸகல பூதங்களே கவனத்தோடு நிச்சலனமாகிக் கேட்டுக்கொண்டிருந்தனவோ என்று தோன்றிற்று. உபன்னியாசத்தின் முடிவில் இரண்டு நிமிஷகாலம் புஷ்பவர்ஷம் வர்ஷித்ததுபோல் நுண்ணிய வர்ஷம் பொழிந்தது. உடனே மிக்க மனோஹரமாயுள்ள "இந்திர தனுஸ்" அகஸ்மாத்தாய் பிரகாசித்தது. பாஹ்யாப்யாந்தர பிரபஞ்சமெல்லாம் ஆனந்த ஸாகரத்தில் மூழ்கின.

அவரிடம் மானிட தத்வம் பகவத் தத்வமாய் விகசித்தது. அந்த மஹிமையைப் பார்க்கும் பாக்கியத்தைப் பெற்றோம். ஸத்தியமும் பிரஸாதமும் வர்ஷித்துக்கொண்டிருந்தன. ஈசுவர களை அவர் மீது அவதரித்தது பிரஸன்னமாகி கவர்ந்துகொண்டேயிருக்கின்றது. ஸ்ரீ ஜகத்குரு இப்பொழுது இவ்விடமேயிருக்கிறார்.

... ... ... ...

சென்ற சஞ்சிகையில், நமது அன்னையார் கலிபோர்னியாவிலுள்ள ஓஹை என்னுமிடத்தில் ஆரம்பித்திருக்கும் மஹத்தான கைங்கரியத்தைப்பற்றிச் சிறிது பிரஸ்தாபித்து அதன் விவரங்களை இந்த சஞ்சிகையில் வரைவதாகக் கூறியிருந்தோம். அவற்-



றையெல்லாம் இங்கெடுத்தெழுத இடமில்லாமைபற்றி நம் நேயர்கள் மன்னிப்பார்களென்று நம்புகிறோம். அந்த ஆனந்த மயமான ஓஹை எனும் பள்ளத்தாக்கில், ஆரிய மஹாவர்க்கத்தின் 6-வது உள்வகுப்பு மனித ஜாதி இப்பொழுது அந்நாடுகளில் அதிகமாய் உற்பத்தியாகிப் பரவிவருவதால், அதன் நாகரீகத்தை ஸ்தாபித்து நடத்துவதற்கு ஓர் மத்திய ஸ்தலம் ஏற்படுத்தி, அங்கு அவர்களுக்கேற்ற நூதன முறையான கல்விச்சாலை, ஆலயம், புஸ்தகசாலை இன்னும் அபிவிருத்திக்கேற்ற மற்ற ஸ்தாபனங்களையும் அமைத்து நடத்த உத்தேசித்திருக்கிறார்கள். ஆம்மென் என்பது ஐரோப்பா கண்டத்திற்கு ஸ்ரீ ஜகத்குருவின் காரியங்களை நடத்துவதற்கு மத்யஸ்தானமாயிருப்பதுபோல், இந்த ஓஹை யென்னும் இடமும் அமெரிக்கா கண்டத்திற்கு மத்தியஸ்தானமாய் விளங்கும். இந்தவிடத்திலும் ஸ்ரீமான் கிருஷ்ணஜி வருஷத்திற்கு மூன்று மாதங்கள் தங்குவார். பல சீடர்கள் அங்கு குடியேறி பரமனது காரியங்களை நடத்துபவர்களாவார்கள்

... ... ... ...

ஸ்ரீமான் கிருஷ்ணஜி தற்காலம் ஓஹையில் நமது அன்னையாருடன் தங்கியிருக்கின்றார். அவர் வருகிற ஆகஸ்டு மாதம் ஆம்மென் நகரில் நடைபெறப்போகும் நக்ஷத்ர மஹாநாட்டிற்குச் சென்று விட்டு ஸெப்டம்பர்மாத வாக்கில் இந்தியாவிற்குத் திரும்பி வரலாமென்று அறிகிறோம். நமது அம்மையார், ஏப்ரல் மாதம் ஐரோப்பாவுக்கு வந்து ஜூன் மாதத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் லண்டன் பட்டணத்திலுள்ள இராணிமண்டபத்தில் புதிய நாகரீகம் என்ற விஷயத்தைப்பற்றி பிரசங்கம் செய்ய ஏற்பாடு செய்துள்ளார். பின்னர் அந்த இராணி மண்டபத்தில் நமது மஹாஸபையின் உபதலைவர் ஸ்ரீமான் C. ஜினராஜதாஸர் அவர்கள் உபந்யாஸங்கள் புரிய ஏற்பாடாகியிருக்கிறது.

... ... ... ...

சென்னையில் நமது அன்னையாரின் தலைமையின் கீழ் நடைபெற்றுவந்த நியூ இந்தியா தினசரிப் பத்திரிகை, சென்ற மார்ச்சு மாதம் 15உயோடு நிறுத்தப்பட்டுப்போன சமாசாரம் கேட்டு யார்தான் வருத்தமடையாமலிரார்? இம்மஹா உபயோகமுள்ள பத்திரிகை, வருஷா வருஷம் பெருத்த நஷ்டத்துடன் நடத்தப்பட்டு வந்தும், அதன் உன்னத நோக்கங்களையும், அது விராகிரத்துடன்

உலகினரின் சாமானிய புத்திப் போக்குடன் போராடி, வருங்கால லக்ஷியங்களை உருவாக்கி நம் நாட்டுக்களித்த அரிய பெரிய செயல்களையும் அறிந்துணர்ந்த உண்மைத் தேசாபிமானிகள் அதற்கேற்பட்ட பொருள் நஷ்டத்தை நமது அன்னையாருக்குக் கொடுத்துதவிய வந்தார்கள். அது இப்போது நிறுத்தப்பட்டதின் முக்கிய காரணம், அது எற்றுக்கொண்ட முக்கியமான தேசத் தொண்டாகிய ஸ்வராஜ்ய சித்திப் பிரசாரம் ஒருவாறு பூர்த்தியடைந்து, அதன் பயனாய் இந்திய ஸ்வய ஆக்ஷி மசோதா தற்காலம் இங்கிலாந்தின் பார்லிமெண்டார் கையில் ஏறியிருப்பதே. இனி அது நிறைவேறுவதற்குத் தடையிராது. ஆயினும் நியூ இந்தியா வாரத்திரப் பத்திரிகையாக இனி பம்பாயிலிருந்து வெளி வருமென்று அறிந்து சந்தோஷிக்கிறோம்.

## பிரம்மஞானசங்கம் தற்கால இந்தியாவுக்கு ஆவசியகம்.

180-வது பக்கத் தொடர்ச்சி.

இந்திய நாட்டிலுள்ள சாதிக்கொடுமையை பிரமஞான சங்கம் நீக்கவல்லது என்று முன்னம் கூறப்பட்டது. இனிச் சமயக் கொடுமையை நீக்கி சமய நன்மையை யுண்டுபண்ணுதலுக்கும் பிரமஞான சங்கத்தின் வேலை அவசியம் வேண்டப்படுவதாகும் என்பதனைக் கூறுவோம்.

2 சாதிக்கொடுமை அறியாமையா லுண்டாதல்போல சமயக் கொடுமையும் அறியாமையால் உண்டாகின்றது. சாதிக்கொடுமையைப்பார்க்கிலும் சமயக்கொடுமை இந்தியாவில் மிக்க விரிவுடையது. சாதிக்கொடுமை இந்துக்களுக்குள் மாத்திரம் பரவுதலுடையது. சமயக்கொடுமையோ இந்துக்களுக்குள்ளும் மகம்மதியர், கிறிஸ்தவர் முதலான சமயத்தார்களுக்குள்ளும் பரவுதலுடையது. சாதிப்பிரிவுகள் சமயச் சார்புபற்றி யுண்டானவைகளாதலினாலே சமய ஞானம் இந்தியர்களுக்குள் விளங்கினால் போலிச் சாதி பேதமும் ஒழிந்து விடும். ஆகையினாலே சமய ஞானம் சாதிக்கொடுமையை நீக்குவதுடன், சமயக் கொடுமையையும் நீக்கிச் சமய நன்மையையும் உண்டுபண்ணும்.

3 இந்தச்சமய ஞானத்தைப் பிரமஞான சங்கம் எப்படி இந்தியர்களுக்குள் உண்டுபண்ணுகின்றது, என்பதை இங்கே கூறுவோம். இந்தியாவில் உலகிலுள்ள எல்லாச் சமயங்களும்



இருக்கின்றன. இந்து சமயத்தின் உட்பிரிவுகளாகிய சைவம், வைணவம், மாத்துவம், ஸ்மார்த்தம், முதலிய சமயங்களும், கிறிஸ்து சமயத்தின் உட்பிரிவுகளாகிய கத்தோலிக், பிராட்டஸ்டெண்டு சமயங்களும், மகம்மதியசமயமும், பாரசீக சமயமும், ஜைன சமயமும், பௌத்த சமயமும், சீக் சமயமும், அநுட்டிக்கிறவர்கள் இந்தியாவில் குடியிருந்துவருகிறார்கள். இந்தச் சமயங்களெல்லாம் அவைகளை நிறுவின ஆசாரியர்கள் சொன்னவாறு இல்லாமல் அந்த அந்தச் சமயத்திலுள்ளவர்கள் சமய ஞானக்குறைவினாலும் காமம் வெகுளிமயக்கங்கள் பற்றி ஒழுகும் உலக நடையினாலும் பலவாறு நிலை திரிந்திருக்கின்றன. ஆதலினால் சமயத்தவர்களும் உலகினை ஆளும் கடவுள் ஒருவனே என்னுங் கருத்தை மறந்து தங்கள் தங்கள் கடவுள் வேறு வேறு என்னும் தப்புக் கருத்தினைக் கொண்டவர்களாய் ஒருவருக்கொருவர் சமயப் பூசல் செய்துகொண்டார்கள். ஒரு சமயத்திலுள்ளவர்களுக்கும் பிறிதொரு சமயத்திலுள்ளவர்களுக்கும் சமயப் பூசல் விளைந்தது. அல்லது ஓரே சமயத்திலுள்ள உட்சமயத்திலுள்ளவர்களுக்குள்ளும் ஒருவருக்கொருவர் சமயச் சண்டை அடிக்கடி செய்துகொண்டிருந்தார்கள்.

4. பிரமஞான சங்கம் ஒரு சமயம் அல்ல. ஒரு கொள்கை அல்ல. பிரமஞான சங்கத் தலைவர்கள் எழுதி வருகின்றதும் சொல்லிவருகின்றதுமான உண்மைகள் யாதானுமொரு சமயச் சார்பு பற்றியவைகளல்ல. எல்லாச் சமயிகளும் படித்து அவரவர்கள் தகுதிக்குத் தக்கபடி ஆராய்ந்து அறிந்து உணர்ந்து தாங்களாக ஒழுகத்தக்க உண்மைகள் அவைகள். ஆங்கிலக் கல்வியறிவாளர் மதிக்கின்ற ஐரோப்பிய பௌதீக ஆராய்ச்சி நூல் முறைப்படி பிரமஞான உண்மைகளை தலைவர்கள் உணர்த்தி வருகின்றார்கள். இப்படி அவர்கள் உணர்த்தி வரும் எந்த உண்மையினையும் நம்புதல் படிக்கிறவர்களுக்குக் கட்டாயமில்லை. படிக்கிறவர்கள் தங்கள் மனதுக்குச் சரி என்று அமைகிற உண்மைகளையே நம்பிப் பின் பற்றும்படி அவர்கள் சொல்லுகிறார்கள். இவ்விதமான படிப்பு அறிவாளர்கள் ஒப்புகின்ற உண்மை ஆராய்ச்சிக்கு ஒத்திருப்பதால் ஆங்கிலக் கல்வி அறிவாளர்கள் தங்கள் தங்கள் சமயத்தில் பெரியோர்கள் கூறியிருக்கின்ற உண்மைகளை எளிதில் அறிதற்கு உதவியாயிருக்கின்றது. பிரமஞான சங்க உண்மைகள், அரைக்கால் உயிர், கால் உயிர், அரை உயிருடன் கூடிய உடல் போல விளங்குகின்ற சமயங்களுக்கு உயிர்த்தன்மை அளிக்கி-

பெருதவி செய்து வருகின்றன. இந்த உதவி யில்லாதிருந்தால் இந்தியாவிலுள்ள சமய அறிவு கொஞ்சமேனுமில்லாத ஆங்கிலக் கல்வியாளர்கள் பலர் நாஸ்திகராயிருப்பார்கள். இதனைப்பல ஆங்கிலப்படிப்பாளிகள் வெளியிட்டிருக்கிறார்கள்.

5. பிரமஞான சங்கத்தின் வேலையின் பலனாக இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன் நடந்த சமயக் கலகங்கள் இப்பொழுது நடக்கிறதில்லை. முன் கிறிஸ்தவப் பாதிரிகள் இந்து சமயத்தை நிந்தித்ததுபோல இப்பொழுது நிந்திக்கிறதில்லை. இந்துக்கள் முன் கிறிஸ்து மதத்தில் சேர்ந்ததுபோல இப்பொழுது சேர்கிறதில்லை. கிறிஸ்தவர்கள் முதலிய பிற சமயிகள் இந்துசமயத்தில் கூறியிருக்கின்ற விக்கிரஹ ஆராதனையைப் பழிக்கிறதில்லை. பிரமஞானசங்கம் இந்து சமய உண்மைகளை விளக்கிவந்ததையும் சமயமாற்றம் கூடாது என்று சொல்லிவந்ததையும் கிறிஸ்தவப் பாதிரிகள் பார்த்து தங்கள் சமயம் கெடுகின்றதாக எண்ணி சங்கத்தை அழிக்கும் கருத்துடன் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் செய்த சூழ்ச்சி பத்திரிகை வாசிக்கிறவர்கள் எல்லாருக்கும் நன்கு தெரியும். ஆனால் இந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் கலகமாத்திரம் இன்னும் நடந்துவருகின்றது. அதற்கு முக்கிய காரணம் மகம்மதியர்களில் மிகச் சிலரே பிரமஞானசங்க அங்கத்தினராயிருக்கிறார்கள். மகம்மதியர்கள் பலர் சங்க அங்கத்தினர்களாகி அவர்கள் செல்வாக்கு மகம்மதியப் பொதுமக்களுக்குள் நடைபெறுவதாயிருந்தால் இந்தக் கலகமும் குறைந்துவிடும் என்பதில் ஐயமில்லை. இந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் இணக்க உறவு உண்டாக்கவேண்டுமென்றும் கருத்துடன் பிரமஞானசங்கம் வட இந்தியாவில் மகம்மதியர்களை சங்க அங்கத்தினர்களாய்ச் சேர்க்கும்படி சில ஆண்டுகளாக முயற்சிசெய்து வருகின்றது.

தொடரும்

மா. லெ. நெல்லையப்ப பிள்ளை,
சிந்துபூந்துறை.

# பிரம்மஞானியின் சித்தவிருத்தி.

## II. அதிருசிய லோகம்.

25வ. தியாகத்தின் சட்டம் ஈசுவர ஸ்வபாவத்தில் ஆதாரமாயுள்ளது. இந்தப் பிரபஞ்சத்தை யுண்டாக்குவதில் ஈசுவரன் தன்னைத்தானே தியாகம் செய்துகொண்டார். அதுதான் ஆனந்தம். ஆகையினால் எல்லாருடைய நோக்கமும் அந்த ஆனந்தத்தைப் பங்கிட்டுக்கொள்ளுவது அல்லது சிதறிவிடுவதாய் இருக்கும், அந்த தியாகத்தில் மூலமானது அநேகர்களை ஈசுவரனுடன் ஒற்றுமைப்படுத்தும் பொருட்டு தன்னைத் தியாகம் செய்துகொள்ளுகிற சந்தோஷமாய் இருக்கிறது. அதனுடைய முடிவு வெளியிடமுடியாத சாந்தம்.

வெளிப்பிரகாரம்.

26வ. கொடுப்பது மிகவும் அதிக சந்தோஷமென்று நாம் அறிந்துகொள்வோம்; ஏனென்றால், அது ஈசுவர ஸ்வபாவத்தின் கருத்தாய் இருக்கிறது. மனிதன் தானாக ஆவதில் அதாவது தன்னுடைய பிரக்ஞை மூலமாகத் தெய்வத்தன்மையை அறிவதை நாம் அடுத்த படியில் தெரிந்துகொள்ளுவோம். அதிகமாக, அதிகமாகத் தான் சந்தோஷமடைவதுமன்றி, மற்றவர்களுக்கும் அதிகமான சந்தோஷத்தைக் கொடுக்கிறவனாவான்.

வெளிப்பிரகாரம்.

27வ. அவன் சென்ற காலத்தில் சேகரித்த ஒவ்வொன்றையும், சக்தியாகவும் திறமையாகவும் மாறினவற்றையும் கோவில் வாசற்படியில் தியாகம் செய்வதற்குக் கொண்டுபோகவேண்டும்; வெறுங் கையுடன் அவ்விடத்திற்குச் செல்லக்கூடாது—அழிக்கத் துணியாமல் இருப்பதற்காக, சுத்தம் செய்து கொள்ளுகிறதென்ற கடினமான வேலையைச் செய்யவேண்டும். சுபநயம் சம்பந்தமான ஒவ்வொன்றையும் அவன் விலக்கி, குணங்களின் சாராம்சத்தை வைத்துக்கொள்ளவேண்டும்.

வெளிப்பிரகாரம்

களது புரோவிர்த்திக்கே தடை செய்துகொள்கிறார்கள். ஜந்துக்களுக்குண்டாகும் உபத்திரவத்தைவிட தனது ஆன்ம விகாசத்திற்குண்டாகும் கெடுதி அதிகம். ஜந்துக்களின் மீது தயையை அப்யசிக்கவேண்டும். அதனால் மஹான்களான தேவதைகள் தங்கள் அனுக்கிரஹத்தை நம்மீது அபாரமாய் வர்ஷிப்பார்கள். தேவதைகளின் அனுக்கிரகம் எனின் தனதான்ய பூரிதமன்று. ஆன்ம விகாசம்; பாரமார்த்திக அபிவிருத்தி.

சில சந்தர்ப்பங்களில் பெரிய தேவதைகள் நமக்கு உதவி புரிதலுக்கு சாத்தியமாகாதபடி நாமே செய்துகொள்வோம். கள் குடி, புகையிலைப் பழக்கம் முதலாயுள்ள கெட்ட பழக்கங்கள் தேவதைகளை சமீபத்தில் நெருங்கவொட்டாமல் தூரத்தில் விரட்டும். த்வேஷம் முன் கோபம் இவைகளால் மனிதனுடைய தேஜஸில் விபரீதமான சலனங்கள் (அலைகள்) உண்டாவதால் தேவதைகளின் அனுக்கிரஹம் உள்ளில் பிரவேசிக்க இடந்தராது.

## மதவிஷயமான கர்மங்கள்.

பெரிய தேவதைகள் இங்கு பிரஸன்னர்களாகி இருப்பதாலேயே இந்தக் காசி க்ஷேத்திரம் பவித்திரமானது. மஹான்களின் ஸமாதிகள் சின்னங்கள் இருப்பதால் அவைகளைச் சுற்றிலும் பவித்திரமான தேஜஸ் வியாபித்திருக்கும். இவ்வித க்ஷேத்திரங்களுக்கு வரும் பக்தர்கள் மிகவும் பரிசுத்தமாயுள்ள பக்தியால் வருவதுபற்றி, தேவர்கள் அதனை உபயோகித்து அதன் துவாரா அவர்களது அனுக்கிரஹத்தை வர்ஷிப்பார்கள். இவ்விதமே கிறிஸ்தவக் கோவில்களில் கூட பூஜைக்காகக் கூடும் ஜனங்களின் பக்தியையே ஆதாரமாகக்கொண்டு தேவதைகளின் அனுக்கிரஹம் பிரவஹிக்கும். பிரதி மதத்திலும் செய்யப்படும் வெளிப்படையான கர்மங்கள் கண்ணுக்குப் புலப்படாத பகவதனுக்கிரஹத்தையும், தேவதாப் பிரஸாதத்தையும் ஆகர்ஷிப்பதற்கு சாதனங்களே. தேவதைகள் கூட பரமேசுவரனுடைய சேவகர்களே.

## ரிஷிகள்.

ஸூக்ஷ்மலோகத்தில் மற்றொருவர்க்க ரிஷிகளும் உண்டு. இவர்களை மஹா பீடாதிகாரிகள், அமானுஷ லோக பாலகர்கள், அத்யாத்மிக பிரபுத்வமுடையவர்கள். நமக்குப் புலப்படாமலே சிரத்தையுடையவர்களான அஸ்மதாதி மானிடர்களுக்கு உதவியைச் செய்து அவர்களை உத்தாரணஞ்செய்ய மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்களை ஆசிரயிப்பவர்களைச் சமீபத்தில் அழைத்து, உதவியைச் செய்து, அவர்களை உத்தாரணஞ் செய்யச் சித்தமாகவிருக்கிறார்கள். மானிட லோக விகாசமே அவரது அபேக்ஷை. இவர்களைக் குறித்த அமூல்யமாயுள்ள ஞானத்தையும், உண்மையையும் வெளியிடல், பிரம்மஞான ஸபையின் நோக்கங்களில் மிகவும் முக்கியமானது.



## முடிவு.

ஸதா, இந்தப் புலப்படாத தேவதைகளோடு உடன்படும் சித்தவிர்த்தியை அப்பியசியுங்கள். துஷ்ட பூத கணங்களிருக்கின்றன. ராக்ஷஸ வர்க்கம் இருக்கின்றது. ஆனாலும் (1) உங்களைச் சுற்றிலும் ஒரு மானஸீக கவசத்தை அமைத்துக்கொள்ளுங்கள். அவர்களின் சக்தி உங்களுக்குள்ளே பிரவேசியாது. (2) ஸர்வகால ஸர்வாவஸ்தையிலும் ஸத்சங்கற்பங்களை சங்கற்பித்துக் கொண்டு, அன்பு பாவனைகள் பிரவஹிக்கும்படி செய்துகொண்டு பரோபகார கார்யங்களில் ஸகல காலத்தையும் செலவிடுங்கள். அந்த ராக்ஷஸகணங்களின் சக்தி உங்களை நெருங்க நேரமாட்டாது. நீங்கள் அப்பரம தயாஸ்வரூபர்களான ரிஷிகளின் பக்தர்களாகி அவர்களின் பிரேமா சக்தி உங்கள்மூலமாய் எப்பொழுதும் பிரவஹிக்கும்படி செய்யுங்கள். அது துஷ்ட ராக்ஷஸ கணங்களின் சக்தியை எட்ட விரட்டிவிடும்.

இந்த தத்துவங்களை யறிந்துகொள்ளுங்கள். இந்த சக்தியோடு ஒத்து ஈடுபடுங்கள். பகவான் ஒருவர். பெயர்கள் எவ்வளவாகிலும் இருக்குமேயொழிய, பகவானை நினைக்கவே அந்த மஹா சக்தி உங்களுக்குள் பிரதிபலிக்கும். பகவான் உலகத்திற்குப் பிதா. ஸகல மானிடர்களும் சகோதரர்கள். மனிதர்கள், தேவதைகள், ஜந்து ஸமூஹம் இவையெல்லாம் ஒரு குடும்பம். இந்த தத்துவத்தை அறியுங்கள். மனதில் வாங்குங்கள். அதற்கனுகுணமாய் ஜீவியுங்கள். இதுவே தோற்றுப் பிரபஞ்ச விஷயத்தில் பிரம்மஞானியின் சித்தவிர்த்தி.

# * பிரம்மஞானியின் சித்தவிர்த்தி.

உபயோகமான வேலைக்காரனைக ஆகும் விதமாய், நினைத்தகாலத்தில் தன்படியே கீழ்ப்படியும் படியாக அதைப்பழக்கு. கொஞ்சகாலம் பழகின பிற்பாடு சரியானபடி தெரிந்து கொள்ள வில்லையென்று கண்டால் அதைமாற்று; நீ உன்னுடைய இச்சா சக்தியை பலப்படுத்த முயல்வதால் அதிகக்கடுமையாய் இராதே. சரியாக வேலை செய்யாத விதத்தை மாற்றத் தயாராயிரு; உனக்கு இஷ்டமான காலத்திலும் பூர்ணமான யோஜனையுடனும் அதைமாற்று.

வெளிப்பிரகாரம்.

9ஃ இப்பொழுது அனுஷ்டானத்தில் உன்னுடைய எண்ணங்களைத்திருப்ப நீ விரும்புவாயாகில், அதற்கேற்ற அறிவு இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. சமூகச் சீர்திருத்த முறையில் மனம் போனபடி செல்லாதே. ஒரு வருஷத்திற்குப் பிற்பாடும், மற்றொருவருஷத்திற்கு பிற்பாடும், அந்த முறையானது அனுசரிக்கப்படுவதினால் சமூகத்திற்கு சாசுவத நன்மை ஏற்படும்படி யதார்த்தமாய் வேலை செய்கிறதாவென்றுபார்க்காமல் முதல் பார்வையில் இருக்கிற ஸ்திதியை உத்தேசிக்கையில் சீக்கிரம் மாற்றிவிடலாமென்று காணப்படுவதால் மட்டும் மாற்றாதே.

படிப்பும் பழக்கமும்.

10ஃ பிரம்மஞானிகளாகிய நம்முடைய வேலையானது விசால முறையில் உள்ள பெரிய ப்ரச்னைகளை விளக்குவதிலும், இனிமேலும் அதிக யோஜனையன்னியில் சகோதர பாவத்தை எவ்வளவு தூரம் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரக் கூடுமென்று பார்க்க முயற்சிப்பதிலும் இருக்கவேண்டும்.

படிப்பும் பழக்கமும்.

11ஃ நாம் உயர்நிலையடைய வேண்டுமென்ற தீவிர இச்சையின்றி நாம் அபிவிருத்தியடைய மாட்டோமாகையால், அதி உன்னதஸ்தானத்தையடைய நாம் சந்தோஷமாய் இச்சிப்போம். அழியக்கூடியவும் இழிவானதும் அற்பமானதுமான யதார்த்தங்களோடு நம்மைச் சேர்த்துக்கொள்ள பிரியப்



3. இப்பிரபஞ்சமெங்கும், இம்மாத்திரமன்று, பிர்ம்மாண்டம் எல்லாவற்றினிடத்தும் இம்மஹா ஏகத்வம் வியாபித்தேயிருக்கின்றது; அல்லது ஏகத்வத்தைநோக்கியே ஸர்வமும் பிரவர்த்தித்துக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு பிரபஞ்சமும், ஜகத்ஸர்வமும் அந்த ஏகத்வத்தில் அந்தர்பாகம்.

இம்மூன்று ஸாராம்சங்களினின்று மற்றொரு முக்கியமான ஸாராம்சம் வெளிபடையாகின்றது. அது யாதெனின், ஸகல பூதங்களுக்கும் சேதன சேதனங்களுக்கும் ஆதாரமாய், ஸநாதனமும் அதாவது பூத பவிஷ்யத் வர்த்தமானங்களுக்கு அதீதமும், திரிகால பாத்திதமாயுள்ள ஆத்மதத்வம் உண்டென்பது. எல்லா வர்க்கங்களும், பாஷாணாதிகள், கொடி செடி விருக்ஷங்கள், பசு பக்ஷியாதிகள், மானிடகோடி, தேவகணங்கள் எல்லாம், ஒரு புகலிடத்தை யடைவதற்கே பிரவர்த்தித்துக் கொண்டிருக்கின்றன. உங்களில் ஒவ்வொருவரும், நாம் எல்லோரும், ஓரோர் மஹா அத்புதப்பேற்றை அடைய இருக்கின்றோம். அம்மஹா அத்புதப் பேறு இப்பொழுது பூரணமாய் விகசித்த புஷ்பமாகாவிடினும், அவ்வித புஷ்பத்தைச் சூசிப்பிவிக்கும் மொட்டாயிருப்பது நிச்சயம். கை விளக்கு சூரியனது அற்ப பிம்பம். நாம் ஒவ்வொருவரும், பிர்ம்மாண்டத்தில் பரிணாமத்தை யடைந்துகொண்டிருக்கும் மஹா சைதன்யத்தின் அம்சர்கள். பிர்ம்மாண்டத்தின் அற்ப பிம்பங்களாயுள்ள பிண்டாண்டர்கள். ஆனதுபற்றி, பிர்ம்மஞானி எல்லோரையும் அவரவர் யதார்த்த ரூபத்தில் பார்ப்பான். அதாவது, பரிணாமத்தை யடைந்துகொண்டிருக்கும் பரிபூரண மஹா அத்புத ஜோதியின் சாயைகளாக பாவிப்பான்.

பகவத்சங்கற்பத்தைக் குறிப்பிட்டறிவதின்மூலமாய், உலகில் வெளிப்பார்வைக்குப் புலப்படும் துக்கங்கள் துரவஸ்தைகள் காலக்கிரமத்தில் புலப்படாது ஒழியுமென அறிவான். பிர்ம்மஞானி விக்ஞானத்தோடுள்ள சாந்த ஆனந்த ஸ்வரூபனவன்.

மானிட கோடியையும், இன்னும் அதைவிடக் குறைந்த பிராணிகளான பசு பக்ஷியாதிகளையும், விருக்ஷம் கொடி முதலியவைகளையும் சோதித்துப்பார்க்க, அவைகளிடத்தும் கூட பரிணாம தர்மங்களை பிரம்மஞானி காண்பான்.

மேலும் உலக பரிபாலனத்திற்கு உத்தமோத்தமங்களாயுள்ள ஏற்பாடுகளும் கூட காணப்படும்.

1. பிர்ம்மாண்டத்தில் அதிபதி ஈசுவரன். இந்த தத்வத்திற்கு ஸ்தூல ரூபம், உபாதி சூரிய பிம்பம். ஸமஸ்த பிராணிகளுக்கும் மூலம், பிராணாதாரம். நமது ஜீவிதத்திற்கும், பிரவர்த்தனைக்கும், நமது பற்றுதலுக்குமே அவர் ஆதாரம். நாமெல்லோரும் அந்த ஜோதி ஸ்வரூபத்தின் அம்சர்களே. அவரது ஒளி, அவரது பிரேமாசக்தியும் ஸதா வெளிப்பட்டுக் கொண்டிருப்பதைப் பற்றியே நாம் ஜீவித்திருக்கின்றோம். பிராப்ய ஸ்தானத்தை நோக்கி அபிவிருத்தியாகி வருகின்றோம். ஆனதுபற்றியே ஸகல மதங்களிலும் சூரியனைக்குறித்து தியானித்தல் போதிக்கப்பட்டிருக்கின்றது. நாம் கூட அப்பிரார்த்தனையை ஸ்மரிக்கின்றோம்.

2. அம்மஹாப் பிரபுவின் பிரதிநிதி பூமண்டலேசுவரரான ஸ்ரீ ஸனத்குமாரர். அவரது விக்ஞானம் பிரபஞ்சமெங்கும் கவர்ந்திருக்கின்றது. அவரது ஸம்ரக்ஷணைக்குள் ஸகலமும் ஜீவித்திருக்கின்றன. அவரிருப்பமையால் தான் "ஸகலமும் க்ஷேமம்". பிரபஞ்சத்தில் தர்மம், நியாயம், சாசுவதம் நித்தியமென்றும் விஷயம் ஸமுசயமற்றதாயிருக்கின்றது.

3. அவருக்குக் கீழே, அவர் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவர்களாகி அனேக அதிகாரிகள், மந்திரி முதலியவர்கள் உளர் அவர்களில் அனேக சாகைகளுண்டு. (1) பிரபுத்வசாகை, மனுக்கள், மனு புத்திரர்கள். (2) ஞானாசார்யர்களான ரிஷிகள். (3) ஏனைய வியவஹாரங்களை நடத்துபவர்கள்.

4. இவர்களுக்குக் கீழ் இன்னும் எவ்வளவோ அதிகாரிகள் இருக்கிறார்கள். எல்லா சாகைகளுக்கும் சேர்ந்தவர்கள் பரிபூரணர்கள். அவர்களுக்குக் கீழ் அஸ்மதாதிகள், அவர்களில் நின்று யதார்த்தமான பரிபாலன வழியைக் கற்றுக்கொண்டு, நாம் கூட அவர்களைப்போல் பரிபூரணர்களாகவே, உலக பரிபாலனத்தில் ஈடுபடுவதற்கு முயற்சிப்பவர்களாவோம்.

இவ்விதம் கொஞ்சமேனும் குறைவற்ற ஏற்பாடுகளிருக்க, பரிபூரணமான பிரேமை நிரந்தரம் பிரவஹித்துக்கொண்டிருக்க, நம்போல் ஒத்தவர்களுக்குள்ள மனோவியாகூலங்கள், விசாரம்



கட்டோடே நசிக்கும். ஈசுவர சங்கற்பத்தை யறியாத பாமரர்களைப்போலல்லாமல், விக்ஞானத்தோடு பகவத் சங்கற்பத்திற்கு ஈடுபடக்கூடியவர்களாவோம், உலக சேவை செய்பவர்களாவோம்.

பிரபஞ்சத்தில் பிரபுத்வங்களெல்லாம், மதங்களெல்லாம் ஜனஸமூஹங்கள் ஜாதிகளெல்லாம், இம்மஹா பிரபுத்வத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கின்றன. சில சமயங்களில் இவ்வுலகில் பிரபுத்வங்களை நடத்தும் அவிவேகங்களையும், தப்புகளையும் பார்க்க, இப்பிரபுத்வங்களெல்லாம் பொம்மை பிரபுத்வங்களா, பிரபுத்வத்தின் நாடகமா? எனத் தோன்றாமல் ஒழியாது. பிரபஞ்சத்தில் யதார்த்தமான பிரபுத்வம் ஒன்றே. அது ஈசுவர பரிபாலனம். அதில் மந்திரிவர்க்கம், பரிபூரணர்களாகி, பரம ஞானத்தையும் பரமப் பிரேமையையும் ஸம்பாதித்த ஜ்யேஷ்ட சகோதரர்களான ஜீவன் முக்தர்கள் அடங்கியது.

ஆனால் முற்றிலும் உலகில் அநியாயம், குரூரத்வம் இவை காணப்படுகின்றனவே, இவ்வித பூரண நியாயம், பிரேமை காணப்படவில்லையே எனச் சொல்லக்கூடும். உண்மையே; ஆயினும் வெளிப்படையாக அவ்விதம் காணப்படும் அநியாயங்களைக் கூட, முடிவில் பரிபூரண நியாய தர்மங்களைக் கூட்டிவிக்கும் படிக்கிரமங்களாகும். ஆதியில் பகவத்சங்கற்பத்தை அறிந்து கொள்ள மாட்டாமற்போனாலும், முடிவில் அந்த சங்கற்பத்தையறிந்து அந்த நோக்கத்தில் எல்லாம் நியாயமே, தர்மமேயென அறியக்கடவோம். இப்பரிணாம மார்க்கத்தில் நான்கு படிகளிருக்கின்றன. 1. ஆத்மப்ரதர்சனம். தனது அந்தரங்க சக்தியை வெளிப்படுத்திக் காட்டுதல். 2. ஸ்வலாபத்தியாகம், தன் சக்தியை இதராளுடைய சேவையில் விநியோகித்தல். 3. ஆத்ம நிவேதனம், அற்பமாயுள்ள பின்ன ஆத்ம பாவத்தை ஒழித்தல். 4. ஆத்ம ஸாக்ஷாத்காரம், ஸர்வாத்ம பாவம். நாமெல்லோரும் இம்மார்க்கத்தில் வளர்ந்துகொண்டிருக்கிறோம், புகலிடத்தினின்று கொஞ்சமோ அதிகமோ தூரத்திலிருக்கின்றோம்.

மிகவும் பிரசித்த பௌதிக சாஸ்திர பண்டிதரான ஸர். ஆலிவர் லாட்ஜ் என்பவர் ஒரு சமயத்தில் இவ்விதம் சொல்லலுற்றார். "பிரபஞ்சத்தில் அதி ஸ்வல்பமாயுள்ள ஸாதன ஸாமக்

கிரியையால் ஸம்பாதிக்கப்பட்ட பலிதமான பலன்களைப் பார்க்க அதிக ஆச்சரியமாக விருக்கின்றது". பசுவானுடைய ஸ்வரூபம் எவ்வளவு அழகாயிருக்கிறதோ அதை நாம் பாவிக்கின் நமது ஜீவிதத்தைக் கூட அவ்வாறே சுலபமாய் அழகாகச் செய்துகொள்ளக் கூடும். பிரபஞ்ச நிர்மாணத்திற்கு ஆதாரங்களாயுள்ள கற்கள் எவையெனின், வித்யுத் சக்திகணங்களின் இரண்டினுடைய சேர்க்கையே யன்றோ!

ஒவ்வொரு மானிட வியக்தியினிடத்தும், ஜன ஸமூஹத்தினிடத்தும், பிரபஞ்சம் புதைந்திருக்கின்றது. ஒவ்வொன்றும் ஜகத்தின் பிரதிபிம்பமே. ஒரு அணுவைச் சோதித்துப் பார்க்க, அதுவும், சூரியகுடும்ப (Solar System.) த்தில் சூரியன் கேந்தரமாக, கிரஹங்களெல்லாம் சுற்றிலும் சஞ்சரித்துக்கொண் டிருக்கிறாப்போல், அணுவிடத்திலும் கூட ஒரு கேந்தரமும் அதைச் சுற்றி அனேக பரமாணுக்கள் சஞ்சரித்துக்கொண் டிருத்தல் காணப்படும். அணு பிரம்மாண்டத்தின் பிரதிபிம்பமென வியக்தமாகிறது.

இந்த தத்வம் மனதிற்குப் பட்டதுமுதல் நமது ஜீவிதங்களைக் கூட சுலபமாய்ச் செய்யவேண்டுமென்ற அவா ஜனிக்கும். சாமான்யமாய் நமது ஜீவித யாத்திரைகளை அதிக விரிவாய்ச் செய்துகொண்டு, சந்துஷ்டி என்பது எவ்விதமென அறியாமல் இருக்கின்றோம். தத்வத்தை யறிந்து அனுஷ்டிக்க சாசுவதமான ஸந்துஷ்டி நமக்கு லபிக்கும். இப்பொழுதோ வண்டுகள் ஒரு புஷ்பத்தினின்று மற்றொருபுஷ்பத்திற்குப் பறக்குமாபோல் ஒரு விஷயத்தினின்று மற்றொரு விஷயத்திற்கு நாம் ஓடிக்கொண்டு, சந்துஷ்டியை யனுபவியாமலிருக்கின்றோம்.

இப் பரிணாம தர்மங்களைத் தெரிந்துகொள்ள, பிரம்ம ஞானி ஸகலபூதங்களிடத்தும் இதராளுக்குச் செய்யவேண்டிய தர்மத்தைக்கண்டுகொள்வான். மானிடர்களிடத்து மாத்திர மன்று. ரிஷிகள், பரம குருக்கள் கூட அகிலஜனஸமூஹ ஸாம்ராஜ்யத்தில் கண்ணோட்ட முடையவர்களாகி தங்களது கனிஷ்ட சகோதரர்களானமானிடர்களுக்குச் சேவைசெய்து வருபவர்களாய்க் காணப்படுவார்கள். நாம் பக்தி செலுத்தும் பரம குருக்கள் ஒவ்வொருவரும் இவ்விதம் உலக ஸாம்ராஜ்ய பரர்களே.



பரமகுருக்களான ரிஷிகள் ஜோதி குடும்பத்தில் ஜ்யேஷ்ட சகோதரர்கள். அவர்களுக்கப்பால் மானிடர்களாகிய நாம். நமக்குக் கீழே திரியக் ஜந்துக்கள், விருக்ஷங்கள் மிருத் பாஷாணாதிகளெல்லாம் அக் குடும்பத்தில் சேர்ந்தவர்களே. ஆகையால் ஜனசமூஹத்தில் பசு பக்ஷியாதிகளையுங் கூட சேர்த்துக்கொள்ளவேண்டும். ஜனஸமூஹத்திற்கு அவைகளிடத்தும்கூட சில பாத்தியதைகளிருக்கின்றன. பலவந்தர்களுக்கு பலஹீனர்களை ரக்ஷிக்கும் பாத்தியம் இருப்பதுபோல் ஜந்துவர்க்கங்களைக் கூட ரக்ஷிக்கவேண்டிய பாத்தியதை மானிடர்களுக்குண்டு. இந்தியாவில் ஜந்துக்களுக்கு அவைகளுடைய உரிமைகளைக் குறைவில்லாமல் அளிக்கின், பாரதீய ஜனாங்கம் இப்பொழுதைவிட சிரேஷ்டமானதாகும். மானிடர்கள் பரிபக்குவம் ஆக ஆக தமது உரிமைகளைவிட தமது பாத்தியதைகளுக்கு விசேஷ முக்கியத்தைக் கொடுப்பார்கள். உரிமைகளைக் கோருதலுக்கு மாறாக தர்மங்களைச் செய்வார்கள். சித்த சுத்தியானவுடன், ஸாதிக்கப்பட்ட உரிமைகளே ஸ்வதர்மங்களாக மாறும். உரிமைகள் தர்மங்களென்ற பேதம் நசித்து இரண்டும் தர்மங்களேயாகும். இவ்வித அகில மானிடவெளி தர்மத்தினின்று, ஸ்பஷ்டமாய் விளங்குவதென்னவெனின், ஒரு பாகத்திற்குக் கெடுதி யேற்படின், மானிடகோடிக்குக் கெடுதியாகும். குரூரத்வம், அபகாரம், சகோதரபாவமின்மை எங்கு காணப்படுமோ, அங்கு ஜனாங்கசரீரத்தினிடமும், மானிடகோடி ஸமஷ்டி சரீரத்தினிடமும் விஷம் வியாபிக்கிறதென கிரஹிக்கவேண்டும். நாம் பரிபக்குவமாக வரக நமது பாத்தியதைகளை விசேஷமாய் கிரஹிப்போம். அதன்பேரில் உலகை உதவியற்றதாய் விடமாட்டோம். மஹான்களான ஆசார்யர்கள் எவரும் உலகை அவ்விதம் விடவில்லை. உலகத்தோடு ஸம்மந்தத்தையடைந்து, உலகோர்களில் தங்களை ஒருபாகமாக வெண்ணியிருந்தார்கள். உலகினின்று எல்லோருக்கும் உதவிபுரிந்துகொண்டு, வழிகாட்டிக்கொண் டிருந்தார்கள். பாரமார்த்தீகமெனின், உலகத்திலிருந்து ஒழிவடைதலன்று. உண்மையாய் முன்னைவிட விசேஷ தேசாபிமான பூரிதர்களாவதே. அதாவது பூரணஞானி, பரிபூரணமாய் வெளிதர்மங்களை நடத்துபவனாவன்.

பிரபஞ்சத்தில் அதிகரித்திருக்கும் பலவித ஜனாங்கங்கள், பலவித மதங்கள், இதர பகுபாடுகள் எல்லாம் ஒரு பெரிய பாட

சாலை. அதில் ஜனங்கங்கள், மதங்கள் எல்லாம் அவ்வளவு தாகதிகள். ஒவ்வொரு ஜனங்கமும், ஒவ்வொரு மதமும், ஒரு பிரத்யேக தர்மத்தைப் போதித்து, அந்தந்த பிரத்யேக தர்மங்களைக் கற்று ஸர்வக்ஞனாய் ஆகத்தகும். பிரம்மஞான ஸமாஜம் இந்த அம்சத்திற்கே விசேஷ முக்கியத்தை யளித்துக்கொண்டு, ஸர்வமானிட, ஸகலமத சகோதரபாவத்தை முக்கிய லக்ஷியமாக ஸ்தாபிக்கின்றது.

ஒவ்வொரு ஜனங்கம் ஒவ்வொரு லக்ஷியத்தை நிலை நாட்டுகின்றது. பாரததேசம் ஒரு தர்மத்தை போதிக்கின்றதல்லவா? இதர ஜனங்கங்கள் நிலை நாட்டிவரும் லக்ஷியங்களை கவனித்தீர்களா? நான் (ஜி. எஸ். அருண்டேல்) நானு தேசங்களில் சஞ்சாரம் செய்தேன். அவரவர் ஆசைகள், எண்ணங்கள், லக்ஷியங்கள் இவைகளைப் பரிசீலித்தேன். ஒவ்வொரு தேசத்தில் ஒரு புதிய நோக்கம் வெளிப்பட்டது. இவ்விதம் தெரிந்துகொள்வதின் மூலமாய் எல்லோருடனும் கொஞ்சம் அனுதாபத்தை யடைய சாத்தியமாயிற்று. இதற்கு உதாரணமாக சில தேசங்களைக் குறிப்பிடுகிறேன். (1) போலேண்டு: வெகுகாலம் சுதந்தரம் அறியாமலிருந்து, இப்பொழுது ஸ்வதந்தர பாடத்தைக் கற்றுக்கொண்டிருக்கிறது. (2) ஆஸ்டிரியா, கலைஞானம். ஐரோப்பாவிற்கெல்லாம் ஆஸ்டிரியா கலைஞானத்திற்குக் கேந்திர ஸ்தானமாகிவருகிறது. அங்கு யுத்தமுடிவில் ஒரு விசேஷ அறிவு ஜனித்து லலிதகலையில் லக்ஷியங்கள் அதிக அத்புதமாக விருக்கின்றன. (3) ஜர்மனி, தனது பூர்வீக அந்தர்முகத்வம். நூறு வருடங்களுக்கு முன்னர் ஜர்மன் வித்வான்கள், பண்டிதர்கள், லலிதகலா பண்டிதர்கள் இவர்கள் எல்லோரும் மிகவும் அந்தர்முக முடையவர்களாகி விக்ஞானத்தைத் தேடுபவர்களாயிருந்தார்கள். இப்பொழுது மீளவும் அந்த விக்ஞானத்தையே நோக்கி வருகின்றார்கள். (4) நார்வே, சாந்தி, ஸமாதானம். உலக சாந்தியைக் கோருபவர்கள். (5) ஸ்வீடன், பாரமார்த்திக தர்மம். ஸகல தேசக்கூட்டத்தில் ஸ்வீடன் நியாயம், தர்மம் இவைகளை மிகவும் முக்கியமாக வற்புறுத்தி பிரதி ஜனங்கமும் கேவல ஸ்வலாபத்தை விட்டொழுக்க வேண்டுமென அழுத்தமாய்ப் பிரதிபாதித்து வருகின்றது. (6) டென்மார்க், பரஸ்பர உதவித்தன்மை. (7) ஹாலேண்டு, உறுதி, சிநேகம், ஜனங்கங்களின் அன்யோன்ய பாவம். (8) பிட்ரிடிஷ் ராஜ்யம், உன்னத லக்ஷியம், ஸமயோசித அனுஷ்டானம். ஆனால் இந்த உன்னத



லக்ஷியங்களை கிரமக்கிரமமாய் மென்மேலும் விசேஷமாக அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரல்வேண்டும். (9) இந்தியாவோ, ஸகல ஜனங்க ஸகல மதங்களும் கூடியுள்ள க்ஷேத்திரம். இவர்களது லக்ஷியம் தத்வஞானம். புறமத ஒற்றுமை, இங்கிதம் (இதராளுடைய மனோபாவங்களை அறிதல்), ஸர்வ பூதங்களிடத்தும் ஆன்மதரிசனம் இவைகளே இந்துக்களின் லக்ஷியங்களென டாக்டர் ஆனந்த குமாரஸ்வாமி என்பவர் சொல்லியிருக்கிறார். இந்த லக்ஷியங்களாலேயே, கலகங்கள், மனஸ்தாபங்கள் நிவர்த்தியடையும். இவ்விதம் ஒவ்வொரு ஜனங்கம், ஜாதி, மதம் இவைகளை அந்தந்த பிரத்யேக தர்மங்களாலேயே அறிதல்வேண்டும். எல்லா லக்ஷியங்களையும் அனுஷ்டித்து விக்ஞானத்தை யடைபவன், பேதபாவங்களைத் தள்ளி, அதிக்கிரமித்து ஸர்வாத்ம ஏகத்வத்தை அடைய வேண்டும். உலகசாந்தி அதை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. இக்காலத்திய வாலிபர்களேனும், பூர்வ வைஷம்யங்களை மறந்து போய், ஜனங்க ஐக்கிய மத்தியத்தோடு கூட அகில ஜனங்க சகோதர பாவத்தை அப்பியசித்து ஸ்தாபிப்பார்களாக. பூர்வீகர்கள் பேதங்களை பலப்படுத்தி அவரவர் தர்மங்களையும் லக்ஷியங்களையும் பலப்படுத்தினார்கள். இப்போதைய வாலிபர்கள் ஸகல தர்ம லக்ஷியங்களைக் கற்று சகோதரபாவத்தை பலப்படுத்தி, மனஸ்தாப கலகங்கள் அணுகவொட்டாமல் செய்து உலக சாந்தியை நிலைநிறுத்துவார்களாக.

ஸகல தேசக்கூட்டம் (League of Nations), இந்த சகோதரபாவம், ஒற்றுமை, பரஸ்பர உதவித்தன்மை இவைகளை நிலை நாட்டுவதற்கே யத்தனித்து வருகின்றது. ஆனால் ஆரம்ப அவஸ்தையில் இருக்கின்றது. அதனுடைய உன்னத லக்ஷியம், ஸகல ஜனங்கங்களும், ஸகல பிரபுத்வங்களும், அங்கங்களாக உள்ள ஜனங்க சகோதரபாவம், பிரபஞ்ச ஸாம்ராஜ்யம். அவ்விதமே பிரம்மஞானியும், ஸகல மானிட வியக்திகளும், ஒவ்வொரு ஜனங்கமும், வேறு வேறு மதங்களிலும் வேறு வேறு தர்மங்களையும் பாடங்களையும் கற்றுக்கொள்கிறார்கள் என அறிந்து, புறமதங்களிடத்தாகட்டும், இதர ஜாதிகளிடத்தாகட்டும் வைஷம்யம் கிஞ்சிற்றேனும் காட்டாமல், சகோதரபாவ சினேகத்தோடு கலந்துறவாடிக்கொண்டு எல்லோருக்கும் பணிசெய்ய கற்றுக்கொள்ளுகிறான். காலக்கிரமத்தில், ஜனங்க பின்னபாவம் ஒழிந்து ஸர்வ

ஜனங்க ஐக்கிய பாவம் ஸ்திரமாகும். நான் எந்த தேசத்திற்குச் சென்றாலும், அத்தேசஸ்தர்களுடன் ஒன்றுபட்டு, அவரது ஆசைகள், எண்ணங்கள், லக்ஷியங்கள் முதலியவைகளை என்னுடையதாகவே பாவிப்பேன். அவர்களது கஷ்டசுகங்களை எனது கஷ்டசுகங்களாக பாவிப்பேன். ஆனதுபற்றி எந்த தேசத்திற்குச் சென்றாலும் அந்ததேசம் எனது தேசமாகவே எனக்குத் தோன்றும். அதை எனது தாய்பூமியாகவே எண்ணுவேன். அந்த ஸ்திதியில், எவருக்காகட்டும் ஸ்வதேசாபிமானம் குறைந்து போகுமென எண்ணப்படாது. மாத்ருபூமிசேவையில் குறைந்த சிரத்தையுடையவனுய் ஆவானென்னும் பயமில்லை. யதார்த்தமாய் இதர ஜனங்கங்களின் லக்ஷியங்களும் கருத்துக்களும் மனதிற்கு வந்தவர்களுக்கு தங்களுடைய கருத்துக்கள் லக்ஷியங்கள் விசேஷ அனுகூலமுள்ளவைகளாயும், விசேஷநோக்கம் நிறைந்துள்ளவைகளாயும், விசேஷ உத்ஸாகத்தோடு கூடியுள்ளவைகளாயும் ஆகும். அவ்விதமே ஸர்வமத ஸகோதரபாவத்தை அனுஷ்டித்துக்கொண்டு, புறமதமூல தர்மங்களையும் லக்ஷியங்களையும் அறிந்தவன் முன்னைவிட விசேஷமாய் ஸர்வ மதாபிமானத்தோடு ஸ்வமதானுஷ்டானம் செய்யக்கடவன். தன் மதாசாரங்கள் விசேஷமுள்ளவைகளாய்க் காணப்படும். இவ்வித உன்னத நோக்கங்கள் விர்த்தியாக, ஸ்வலாபத்தையும், ஸ்வப்பிரயோஜனங்களையும் உபேக்ஷைசெய்யவேண்டிய அவசியமில்லை,

இப்பொழுது பிரபஞ்சமெல்லாம், இந்த ஸமஷ்டிபாவம் ஸமுதாய சித்தவிர்த்தி, ஸமஷ்டி மதம் இவற்றையே இச்சித்து வருகின்றார்கள். அவற்றையே எதிர்பார்த்து வருகின்றார்கள். எச். ஜி. வெல்ஸ்என்னும் மஹா அவாவுள்ளவர் "ஸமஷ்டி சித்தவிர்த்தி என் இன்னும் உலகில் முளை வீசவில்லை?" என வினவினர். காரணம் சகோதரபாவம், அன்பு இல்லாது போவதே. அக்காரணம் பற்றியே கலகங்கள் மனஸ்தாபங்கள் உண்டாகின்றன. சகோதர பாவமிருக்குமிடத்தில் இதராளுடைய நோக்கங்களும், ஆசைகளும் சுலபமாய் மனதிற்கு வரும், கலகங்களுக்கு இடமிராது.

இந்தியாவில் எப்பக்கம் நோக்கினும், கக்ஷிகள், ஸ்வபக்ஷவாதங்கள், பரபக்ஷ நிந்தனைகள், இவைகளால் நிரம்பியிருக்கின்றன, அவர்களில் அவர்கள் கலகம் செய்யுமளவும் அவர்கள் கோரிக்கை கைக்கு எட்டமாட்டாது. எல்லோரும் ஸமரஸத்திற்காகப் பாடுபடல் வேண்டும்.



முக்கியமாய் கவனிக்கத் தகுந்த அம்சங்களில் ஒன்று இரண்டு குறிப்பிட்டு விட்டு அத்துடன் நான் நின்றுவிடுகிறேன்.

1. அவசியம் சகோதர பாவத்தை அப்யசிக்க வேண்டும். எவ்வளவு கஷ்டமானாலும், பிரத்யேக வியக்திகளுக்கும் கக்ஷிகளுக்கும் எவ்வளவு நஷ்டமாகக் காணப்படினும் ஸமஷ்டி சகோதர பாவத்தைத் தப்பாமல் அனுஷ்டிக்கத் தகும்.

2. ஸ்வ லாபத்தையும், ஸ்வ அபிமானத்தையும் மறந்து, பூரண சகோதரப் பிரேமையோடு தேசத் தொண்டு செய்பவர்கள் வேண்டும். புதிய சட்டங்கள், பிரபுத்வங்களை விட நிஷ்காம பிரேமையுடன் கூடிய தேசபக்தர்கள் மிகவும் அவசியமானவர்கள்.

சகோதரர்களே! பிர்ம்மஞானியாகுங்கள். சகோதர பாவத்திற்காக உறுதியாய் நில்லுங்கள். எல்லோரிடமும் சிநேக ஞானத்தை அப்பியசியுங்கள். அப்படிப்பட்டவர்களே உண்மையான பாரதீயவாசிகள். அவர்களே அகில ஜனங்கத்தைச் சார்ந்தவர்கள். மஹான்களான ரிஷிகளின் தொண்டர்களாகுங்கள். பிரபஞ்சத்தின் ஸ்திதி கதிகள் ரிஷிகளின் ஆதீனமென்பது உண்மையே. அவர்களின் நோக்கங்களையறிந்து அவர்களுக்கு நாம் மனப்பூர்வமாய் ஈடுபடின் அவர்கள் நமது மனோரதங்களைப் பரிபூரணமாய் அளிப்பார்கள்.

C. ராமய்யா.

---

# திவ்யஞானஸாரம்.

222-ம் பக்கத் தொடர்ச்சி.

படுக்கையின்பேரில் உட்கார்ந்து ராத்ரிஸூக்தம் என்ற ஸ்தோத்ரத்தை ஜபித்து விஷ்ணுவையும் இஷ்ட தேவதையையும் த்யானித்து நிச்சல (அசைவில்லாத) சித்தத்துடன் இதர சைவ வைதிக மந்த்ரங்களை ஜபித்து காயத்ரி மந்தரத்தை கூட ஜபித்து நித்ரை செய்யவேண்டும்.

இதே அர்த்தத்தை விஷ்ணு புராணத்தில்

"நக்ஷஸ்த்ரா வ்யயம்விஷ்ணும் ஸம்ஸாயிஸ்யு: ஸவ்வெபெம்ஶி ॥"

என்று விதிக்கப்பட்டிருக்கிறது. இது தவிர,

[illegible]
[illegible]

பகவானையாகிலும் பாகவதர்களில் உத்தமமானவர்களை யாகிலும் ஸ்பரித்து நித்ரை செய்தால் கெட்ட ஸ்வப்னங்களிரா தென்றர்த்தம்.

காலையிலேயே முதன்முதல் த்யானம் செய்துகொண்டு, த்யான காலத்தில் சிந்தித்து உத்க்ருஷ்டமான பாவனைகளுக்கு அநுகூலமாகத் தினசர்யையை லௌகிக வ்யவகாரங்களில் பரிசுத்தமாக்கிக்கொள்ளத் திட ப்ரயத்னம் செய்துகொண்டு தூங்குவதற்குமுன், தன் மனோ வாக்கு, காய கர்மங்களை த்ரிகரண சுத்தியுடன் பரிசீலனம் செய்துகொண்டு நித்ரைக்குமுன், ஈச்வரனை த்யானித்து காயத்ரி மந்த்ரார்த்தத்திற்கு அநுகுணமாக ஸமஸ்த பூத கோடிகளுடைய அபிவ்ருத்தியை உத்தேசித்து ஈச்வரனை த்யானித்துக் கொண்டு, ஜாக்ரதையுள்ளவனுகி ப்ரயத்னம் செய்யும் ஜீவன் காலக்ரமத்தில், அதி சீக்ர காலத்திலேயே, சித்தத்தைச் சுத்தி செய்துகொள்வான். தன்னுடைய அந்தக்கரண சுத்தி தினந்தினமும் தனக்கே ஸ்பஷ்டமாகிக் கொண்டு வரும். இப்படி யத்னம் செய்துகொண்டுவருகையில் கல்யாண குணங்களெல்லாம் ஒவ்வொன்ருக ஸ்வாபாவிகங்களாகி அவைகளுக்கு விபரீதமான ஆஸுரஸம்பத்குணங்கள் நிர்மூலமாகும். அப்படிக் காம க்ரோதங்கள், அஹங்காரம், மமகாரம், தம்பம் (மோசம்) தர்பம் (கர்வம்) பாருஷ்யம் (காடின்யம்) முதலான குணங்கள் க்ரம க்ரமமாக எரிந்துபோனதுபோலாகும். ஹ்ருதயத்தில் அழுந்திய துர்க்குணங்கள் தஹித்துப்போய், ஹ்ருதயம் நிர்மலமாய்ப் பகவானுக் கிருப்பிடமாகும். ஸ்ரீ சதாசிவன், ச்மசானவாசி என்று க்ரந்தங்களில் சொல்லியிருக்கிறதல்லவா ? காமக்ரோதம் முதலான நீசகுணங்களில்லாத ஹ்ருதயாகாசமேதான் அந்த மஹா ச்மசானமென் றறியவேண்டும். அப்படி நிஷ்காமமாய் நிர்மலமான ஹ்ருதயம்தான் மஹா ஸ்மசானம். அதுதான் ஆனந்தம். இந்த பேர்கள் வாராணஸி (காசி க்ஷேத்ரம்) க்கு அன்வயமாகும். இந்த நிர்மலமான க்ஷேத்ரம்தான் காசிக்ஷேத்ரம். அதில் ப்ரகாசிக்கும் ஜகதீச்வரன்தான் விச்வேச்வரன்.

[illegible]

ஹ்ருதயத்தைப் பரிசுத்தம் செய்துகொண்டால் ஸ்வார்த்தபரத்வம் (தன்லாபத்தையே எண்ணங்கொண்டிருப்பது), அஹங்கார (நான்என்றதும்) மமகாரங்களும் (என்னுடையது என்பதும்) நசிக்கும்பொழுது அப்படிப்பட்ட சித்தசுத்தியுள்ள சிஷ்யன் அகப்படுவானுவென்று தேடிக்கொண்டிருக்கும் லோகோத்தாரணம் செய்யும் (காப்பாற்றும்) பரமகுருக்கள், மஹாத்மாக்கள், அவனை அநுக்ரஹித்து அவனுடைய ஹ்ருதயத்திலுள்ள இருளைப் போக்கி, ஞானதீபத்தை ஏற்றி அவனைத்தங்களிட முங்கிய சிஷ்ய கோடியில் சேர்த்துக்கொண்டு அவனை க்ருதார்த்தனைச் செய்வதும் தவிர, அவன் மூலமாக லோகத்தில் பாரமார்த்திக புத்தியுள்ளவர்களுக்கு அபாரமான உபகாரத்தையுஞ் செய்வார்கள். அப்படிப்பட்ட மஹநீயர்கள்தான் ஸம்ஸாரத்திலிருக்கிறதுபோல் நடித்துக்கொண்டு, நிஷ்கர்மர்களாகி லோகஹிதத்திற்காக ஸம்ஸாரிகள்போல் ப்ரவர்த்திப்பார்கள். அவர்கள் தங்கள் சித்தசுத்தியால் ஜீவன் முக்தர்களான மஹாத்மாக்களுடைய அநுக்ரஹத்திற்குப் பாத்திரர்களாகஆகி லோகத்தில் தங்கிஇருந்து தாங்கள் செய்யும் போதனையினுலும், ப்ரவர்த்தனை (நடவடிக்கை) யினுலும் சிரத்தையுள்ளவர்களாக இருக்கும் நம்மைப்போன்றவர்களுக்கு மார்க்கத்தைக் காட்டி, க்ஞானபோதனையைச்செய்து ஐஹிக ஆமுஷ்மிகங்கள் (இஹபரஸுகங்கள்) இரண்டு முண்டாகும்படிச் செய்வார்கள். நாமெல்லோரும் சிரத்தையுடன் ப்ரயத்னித்துச் சித்தசுத்தி செய்து கொண்டால் அப்படிப்பட்ட மஹாத்மாக்களிட அநுக்ரஹத்திற்குப் பாத்ரர்களாவோமென்பதற்கு ஸந்தேஹமில்லை. மும்முறையும் ஸந்தேஹமில்லை.

அப்படி முக்தர்களான மஹாத்மாக்கள் நம்மை அநுக்ரஹிக்கிறவர்கள் இப்போதும் காத்துக்கொண்டிருக்கிருர்கள்.

𑌶𑌾𑌨𑍍𑌤𑌾 𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑍋 𑌨𑌿𑌵𑌸𑌨𑍍𑌤𑌿 𑌸𑌨𑍍𑌤𑍋
𑌵𑌸𑌨𑍍𑌤𑌵𑌲𑍍𑌲𑍋𑌕𑌹𑌿𑌤𑌂 𑌚𑌰𑌨𑍍𑌤𑌃।
𑌤𑍀𑌰𑍍𑌣𑌾𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌭𑍀𑌮𑌭𑌵𑌾𑌰𑍍𑌣𑌵𑌂 𑌜𑌨𑌾𑌨𑍍
𑌅𑌹𑍇𑌤𑍁𑌨𑌾𑌨𑍍𑌯𑌾𑌨𑌪𑌿 𑌤𑌾𑌰𑌯𑌨𑍍𑌤𑌃॥

என்று ஸ்ரீ சங்கராசாரியாரவர்கள் விவேக சூடாமணியில் எழுதியிருக்கிருர். அப்படிப்பட்ட மஹாபரம குருசிரேஷ்டர்கள் இப்போதும் இருக்கிருர்களென்றும், லோகத்தின் ஹிதத்திற்காக ஸம்சாரம் செய்துகொண்டிருக்கிருர்களென்றும், தாம் ஸம்ஸாரஸமுத்ரத்தைத் தாண்டியும்கூட காரணமில்லாத கருணையால் பிறர்

களையும் தாண்டவைக்க வேண்டுமென்று பூண்டு கங்கணம் கட்டிக் காத்துக்கொண்டிருக்கிறார்களென்றும் எழுதியிருக்கிறார். அவர்கள் எங்கேயோ இருக்கிறார்களென்று சிந்தைவேண்டாம். அவர்களின் ஸ்தூலசரீரம் எங்கிருந்தாலும் ஸரிதான். அவர்கள் நம் ஹ்ருதய கவாடங் (கதவு) களண்டையிலேயே காத்திருக்கிறார்கள். நாமே பணப் பேராசை, கீர்த்தியினிடத்திலாசை, தாரா புத்ராதிகளிடத்தில் மோஹம், முதலான சங்கிலிகளையும், பத்ரமாகப் பிகுவாகப் போட்டு அவர்களை ஹ்ருதயத்தில் நுழையவிடாமலிருக்கிறோம். த்வாரங்களையும், கவாக்ஷிகளையும் போட்டுக் கொண்டு உள்ளே உட்கார்ந்துகொண்டு, ஸூர்யகாந்தி இல்லையே, இருட்டாக இருக்கிறதே என்று வ்யஸனப்படும் குருடனைப் போல் அல்லாமல், நாம் ஹ்ருதயம் என்கிற அறையின் கதவுகளைத் திறந்து, ஸ்வயநயம் பாராட்டுதல், அஹம்காரம், மமகாரம், தனுபேக்ஷை முதலான சங்கிலிகளைத் தூர எறிந்துவிட்டால், அந்த தயா ஸ்வரூபர்களான மஹாத்மாக்கள், ஹ்ருதயங்களில் ப்ரவேசித்து, ஞானதீபத்தை ஏற்றி நம்மைக்கூட அவர்களைப் போன்றவர்களாகச் செய்வார்கள். அப்படி அவர்களின் அனுக்ரஹத்தால், நாம் பரிபூர்ணர்களாகி, ஞானிகளாகி அவர்களைப்போல், லோக கைங்கர்யத்தைச்செய்ய யோக்யதை உண்டாகி, பூதஸேவை (வேலை)யைவிட வேறு ஆனந்தம் இல்லை என்று ஸ்வானுபவத்தினால் அறிந்துகொண்டு, பகவானுடைய ஸேவகர்களாகி, லோகத்திற்கு அபாரமான உபகாரம் செய்யக்கூடும். அப்படிப்பட்ட பாக்யம் நம் எல்லாருக்கும் உண்டாகக்கடவது! அந்த மார்க்கத்தில் ப்ரவர்த்தித்து அம்மாதிரி யோக்கியதை ஸம்பாதித்துக்கொள்வதற்கு வேண்டிய ஊக்கமும், ஸ்திரமான புத்தியும், பகவானும், மஹாத்மாக்களும் நம் எல்லாருக்கும் கொடுப்பார்களாக! அவர்களின் அனுக்ரஹத்தால் நாம் லோகஹிதத்திற்காகவே ஜீவித்திருக்கிறவர்களின் கூட்டத்தில் சேர சக்தியுள்ளவர்களாக ஆவோமாக!

ஶிவாய லோகஸ்ய பவாய பூதயே ய உத்தமஶ்லோக
பராயணா ஜநா: । ஜீவந்தி நாத்மார்த்த............ ॥

மஹானுபாவர்களானவர்கள் லோகத்தினுடைய க்ஷேமத்திற்காகவும், ஸகல பூதங்களுடைய அபிவிருத்திக்காகவும் ஜீவித்திருக்கிறார்களே தவிர தங்களுக்காக அல்ல.

A. ராமஸ்வாமி சாஸ்திரி.



மார்ச்சு மாசம்.

25௳ தியாகத்தின் சட்டம் ஈசுவர ஸ்வபாவத்தில் ஆதாரமாயுள்ளது. இந்தப் பிரபஞ்சத்தை யுண்டாக்குவதில் ஈசுவரன் தன்னைத்தானே தியாகம் செய்துகொண்டார். அதுதான் ஆனந்தம். ஆகையினால் எல்லாருடைய நோக்கமும் அந்த ஆனந்தத்தைப் பங்கிட்டுக்கொள்ளுவது அல்லது சிதறிவிடுவதாய் இருக்கும், அந்த தியாகத்தில் மூலமானது அநேகர்களை ஈசுவரனுடன் ஒற்றுமைப்படுத்தும் பொருட்டு தன்னைத் தியாகம் செய்துகொள்ளுகிற சந்தோஷமாய் இருக்கிறது. அதனுடைய முடிவு வெளியிடமுடியாத சாந்தம்.

வெளிப்பிரகாரம்.

26௳ கொடுப்பது மிகவும் அதிக சந்தோஷமென்று நாம் அறிந்துகொள்வோம்; ஏனென்றால், அது ஈசுவர ஸ்வபாவத்தின் கருத்தாய் இருக்கிறது. மனிதன் தானாக ஆவதில் அதாவது தன்னுடைய பிரக்ஞை மூலமாகத் தெய்வத்தன்மையை அறிவதை நாம் அடுத்த படியில் தெரிந்துகொள்ளுவோம். அதிகமாக, அதிகமாகத் தான் சந்தோஷமடைவதுமன்றி, மற்றவர்களுக்கும் அதிகமான சந்தோஷத்தைக் கொடுக்கிறவனாவான்.

வெளிப்பிரகாரம்.

27௳ அவன் சென்ற காலத்தில் சேகரித்த ஒவ்வொன்றையும், சக்தியாகவும் திறமையாகவும் மாறினவற்றையும் கோவில் வாசற்படியில் தியாகம் செய்வதற்குக் கொண்டுபோகவேண்டும்; வெறுங் கையுடன் அவ்விடத்திற்குச் செல்லக்கூடாது—அழிக்கத் துணியாமல் இருப்பதற்காக, சுத்தம் செய்துகொள்ளுகிறதென்ற கடினமான வேலையைச் செய்யவேண்டும். சுயநயம் சம்பந்தமான ஒவ்வொன்றையும் அவன் விலக்கி, குணங்களின் சாராம்சத்தை வைத்துக்கொள்ளவேண்டும்.

வெளிப்பிரகாரம்

28௳ தன்னுடைய லக்ஷியத்துக்குச் சமீபித்து வந்துகொண்டிருப்பதைப்பார்க்கும், தெய்வத்தன்மையை யறிந்த

பரிசுத்தவான்களின் பிரகாசம் தான் உள்ளுக்குள் செல்லுவதற்கு ஏற்படும் தடங்கல் குறைகிறவரையிலும் ஆத்மாவானது ஒரு நிமிஷங்கூட சும்மாயிருக்கக்கூடாது, திருப்தியடையக்கூடாது.

வெளிப்பிரகாரம்.

29வ. ஆசையினால் உலகத்தில் வருத்தமாகத் தோன்றுவதெல்லாம் வெளிப்பிரகாரத்தில் சந்தோஷமாக ஆகிறது. சுத்தப்படுவதில் ஏற்படும் துன்பம் நல்லாரவை ஏற்கக்கூடிய சிநேகமாய் இருக்கின்றது.

வெளிப்பிரகாரம்.

30வ. அதுதான் பேச்சின் தவமென்றும், யதார்த்தத் தவமென்றும், மேல்நோக்கும் ஒவ்வொருவரும் அர்ப்பிக்கும் பேச்சின் தியாகமென்றும் சொல்லப்படுகிறது.

வெளிப்பிரகாரம்.

31வ. அவன் சுயேச்சையடைவதில் கட்டாயப்படுத்தப்படும் கட்டுகளை விலக்கிக்கொள்ளுகிறான். அதனால் பூர்ணமான சுயநலம் அற்றதன்மையைகற்றுக் கொள்ளுகிறான். எல்லாருக்கும் நன்மைசெய்வதையே தான் தேடுவதாகத் தெரிந்து கொள்ளுகிறான், எல்லாருக்கும் கைங்கரியம் செய்வதை மட்டும் தான் அடைய விரும்புகிறான்.

வெளிப்பிரகாரம்.

## ஏப்ரல் மாதம்.

### பகுத்தறிவு.

1வ. உண்மையான விவேகத்தையும் உண்மையான பகுத்தறிவையும் நீ அபிவிருத்தி செய்துகொள்வதுடன், உன்னுடைய வாழ்க்கையில் உன்னைச் சூழ்ந்திருக்கும் எல்லாவற்றிலும் உபயோகமுள்ளவைகளின்னவை யென்றும், உபயோகமற்றவைகளின்னவை யென்றும் அறிந்து கொள்ளவேண்டும். நீ சந்திக்கும் ஸ்திரீ புருஷர்களிடத்தில் வெளிப்படையாய்த்



தோன்றும் கோலம் குற்றங்குறைகள் முதலியவற்றைக் கவனியாது, அவர்களுக்குள்ளிருக்கும் ஈசுவரத் தன்மையை மாத்திரம் அறிந்துகொள்ளக் கற்றுக்கொள்ள வேண்டும்.

—மஹாத்மாக்களும் அவர்களையடையும் மார்க்கமும்.

2வ. ஒவ்வொரு மனிதனிடத்துமுள்ள ஈசுவரத் தன்மையையே பார்த்தும், அவனிடமுள்ள கெடுதலான பாகத்தை நீக்கி மிகவும் நன்மையான பாகத்தைப் பார்த்தும் அவனுக்கு நீ உதவி செய்யும்பொருட்டு அவனுடைய உத்கிருஷ்டமான பாகத்துடன் உன்னை ஒருமைப்படுத்திக் கொள்ளக் கற்றுக்கொள்ள வேண்டும். அவனிடமுள்ள அருவருப்பை விளைவிக்கும் விஷயங்களைக் கண்டு அவனைப் பகைக்கக்கூடாது; ஏனெனில் பகையானது அவனிடமுள்ள கெடுதலான சுபாவத்தை பலப்படுத்தி, அதைவிட்டு மேல் கிளம்புவதற்கு அவனுக்கு அதிகக் கஷ்டத்தை உண்டாக்குகிறது. சோதனை முறையான மார்க்கத்தில் செல்லுகையில் சீஷன் அடையும் முதற் சாதனம் இதுவே.

—மஹாத்மாக்களும் அவர்களையடையும் மார்க்கமும்.

3வ. ஒவ்வொரு அனுபவத்திலிருந்தும் அதனாலுண்டாகும் ஞானத்தை கிரகிக்குமுன், அவ்வனுபவத்தில் கொஞ்சம் நாம் பட்டால் போதுமா, அல்லது மறுபடியும் மறுபடியும் அவ்வனுபவத்தை அடைந்தேதான் அந்த ஞானத்தை அடைய விரும்புவோமா என்கிற விஷயத்தில் தீர்மானம் செய்து கொள்வது எப்பொழுதும் நம் ஆதீனத்தில் உள்ளது. மேலான விஷயத்திலிருந்து கீழானதை வேறுபடுத்தக் கற்றுக்கொண்ட பிற்பாடும் கீழ்ப்பட்டதை மனதாரத் தெரிந்து செய்வதுதான் எல்லா மதக் கொள்கைகளிலும் ‘பாபம்’ என்று சொல்லப்படுவதாகும்.

—பிரம்மஞானச் சுருக்கம்.

4வ. நம்முடைய பலத்தை ஆலோசித்து அளந்து அதற்குப் பொருத்தமாகவே நம் வேலைகளைச் செய்வது ஓர் அவசியமான விஷயமாகும். வேலை எவ்வளவு செய்தோமென்பது

முக்கியமல்ல; ஆனால் நாம் செய்யவேண்டிய வேலையின் அனேகமாகும் அதைச் செய்ய நமக்கிருக்கும் சக்திக்குமுள்ள யுக்தமான விபாகமே முக்கியமாகும்.

—சித்த விருத்தி விஷயம்.

5வ. சரீர சுகத்தையே பிரதானமாகக் கொண்டுள்ள வாழ்க்கையிலிருந்து மாறி, மனதிற்கு விஷயமான அறிவு வளர்ச்சி முதலியவற்றை முக்கியமாகக் கருதிய வாழ்வை அவலம்பிக்கக் கற்றுக்கொள்கிறவர்களும், மேன்மேலும் அதிக சாசுவதமானவைகளையே நாடிக்கொண்டிருப்பவர்களும் மனித விகாஸ முறைக்கு உதவி புரிந்துகொண்டிருப்பவர்கள்.

—துன்பத்தின் அர்த்தமும் உபயோகமும்.

6வ. மற்றெல்லாவற்றையும் விட மேலாக, அவன் கைங்கரியத்திற்கே தன்னைத் கருதியாக்கிக்கொள்கிறான்; ஆகையால், அதன் தன் சக்தியை எவ்விதம் உபயோகப்படுத்துகிறதென்ற எண்ணங்களைத் தெரிந்தெடுத்துக் கொள்வதில் வெளியுலகத்தில் அவைகள் எப்படிச் செய்கைகளாகப் பரிணமிக்கும் என்று கணக்கிட்டு, எவ்வளவு தூரம் அவைகள் உபகாரார்த்தம் வேலைசெய்யும், எவ்வளவு தூரம் அவைகள் மற்றவர்களுக்கு ஆதரவு அளிக்கும், பரிசுத்தத்தை உண்டாக்குவதில் எவ்வளவு தூரம் உதவி புரியும் என்று அறிந்து கொள்கிறான்

வெளிப்பிரகாரம்.

7வ. அவன் தன் பிரக்ஞையை, நன்மையானவைகளையெல்லாம் ஆகர்ஷித்துக்கொள்ளும் ஓர் காந்தமாக ஜாக்கிரதையுடன் செய்துகொள்கிறான். அதனால் தீமை யெதுவும் அவனைவந்து தட்டித்தாக்கும் பொழுது அது நசித்துப்போகின்றது; நல்லவைகளெல்லாம் அதிக வளர்ச்சி யடையும்பொருட்டு அவன் பிரக்ஞையில் வந்து சேர்கின்றன.

வெளிப்பிரகாரம்.

8வ. உன்னுடைய சரீரத்தை அதற்கு இஷ்டமான காலத்தைத் தெரிந்தெடுக்கும்படி அனுமதிக்காதே. மனதிற்கு உபயோகமான வேலைக்காரனாக ஆகும் விதமாய், நினைத்தகாலத்தில் தன்படியே சீழ்ப்படியும் படியாக அதைப்பழக்கு. கொஞ்சகாலம் பழகின பிற்பாடு சரியானபடி தெரிந்து கொள்ள வில்லையென்று கண்டால் அதைமாற்று; நீ உன்னுடைய இச்சா சக்தியை பலப்படுத்த முயல்வதால் அதிகக்கடுமையாய் இராதே. சரியாக வேலை செய்யாத விதத்தை மாற்றத் தயாராயிரு; உனக்கு இஷ்டமான காலத்திலும் பூர்ணமான யோஜனையுடனும் அதைமாற்று.

வெளிப்பிரகாரம்.

9வ. இப்பொழுது அனுஷ்டானத்தில் உன்னுடைய எண்ணங்களைத்திருப்ப நீ விரும்புவாயாகில், அதற்கேற்ற அறிவு இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. சமுகச் சீர்திருத்த முறையில் மனம் போனபடி செல்லாதே. ஒரு வருஷத்திற்குப் பிற்பாடும், மற்றொருவருஷத்திற்கு பிற்பாடும், அந்த முறையானது அனுசரிக்கப்படுவதினால் சமூகத்திற்கு சாசுவத நன்மை ஏற்படும்படி யதார்த்தமாய் வேலை செய்கிறதாவென்றுபார்க்காமல் முதல் பார்வையில் இருக்கிற ஸ்திதியை உத்தேசிக்கையில் சீக்கிரம் மாற்றிவிடலாமென்று காணப்படுவதால் மட்டும் மாற்றாதே.

படிப்பும் பழக்கமும்.

10வ. பிரம்மஞானிகளாகிய நம்முடைய வேலையானது விகாஸ முறையில் உள்ள பெரிய ப்ரச்னைகளை விளக்குவதிலும், இனிமேலும் அதிக யோஜனை யன்னியில் சகோதர பாவத்தை எவ்வளவு தூரம் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரக் கூடுமென்று பார்க்க முயற்சிப்பதிலும் இருக்கவேண்டும்.

படிப்பும் பழக்கமும்.

11வ. நாம் உயர்நிலையடைய வேண்டுமென்ற தீவிர இச்சையின்றி நாம் அபிவிருத்தியடைய மாட்டோமாகையால், அதி உன்னதஸ்தானத்தையடைய நாம் சந்தோஷமாய் இச்சிப்போம். அழியக்கூடியவும் இழிவானதும் அற்பமானதுமான யதார்த்தங்களோடு நம்மைச் சேர்த்துக்கொள்ள பிரியப்

படுவதினால், நாம் முன்னுக்குப் போகாமல் தடுக்கப்படுகிறோம். உயர்வானதும் விசாலமுமான சாசுவதமுமானவைகளுடன் கலந்துகொள்ள இச்சித்து நாம் முன்னுக்கு வரக்கூடாதா?

உள் வாழ்க்கையில் சில சங்கடங்கள்.

12௳ உங்களுக்குள் முக்கியமாய் வயதானவர்களுக்குச் சொல்வதாவது, உங்களுக்குக் கீழ்வயதிலுள்ளவர்கள் நினைக்கும் நினைவைத்தடுக்க முயற்சிக்காதேயுங்கள். ஒவ்வொரு தலைமுறையாரும் அதற்கு முந்தின தலை முறையாரைப்பார்க்கிலும் உண்மைவழியில் அதிகமாய்ச் செல்லுகிறார்கள். மூத்தவர்களான நாம் உண்மையைக் கைப்பிடித்துக் கொள்ளவில்லை, அதைக் கற்றுக்கொண்டுமட்டும் வருகிறோம்; நாம் போராட்டத்தின் பேரிலும் வேதனையுடனும் மன உபாதியோடும் கண்டுபிடித்த உண்மைகளை லகுவாய் அடையும்படியான லாபம் நம்முடைய இளையவர்களுக்கு ஏற்படுகிறது.

சுயேச்சையடைய மார்க்கம்

13௳ முக்கியம் அமுக்கியம் இவைகளின் வித்தியாசத்தைத் தெரிந்துகொண்டு, மிருதுவாக இணங்குந்தன்மையையும், இனிமையான மரியாதையையும் முக்கியமற்ற விஷயங்களில் அனுசரிக்க அவன் பழகவேண்டும். காரியமுள்ள விஷயங்களை பூரணமாய் பின் பற்றும்பொருட்டு காரியமில்லாத அற்ப விஷயங்களில் இணங்குவது நல்லது.

தீக்ஷாமுறை

14௳ உதவிசெய்யும் கடமைக்கும் ஆக்ஷிசெய்ய வேண்டுமென்ற ஆசைக்கும் உள்ள தாரதம்யத்தை நீ கற்றுக் கொள்ளவேண்டும். அநேக ஜனங்கள் தங்களுடைய சொந்த [illegible]யைக் கவனிப்பதை விட்டொழித்து மற்றவர்களைக் காப்பாற்றுகிறவர்கள் போல் எண்ணிக்கொண்டு மற்றவர்களுடைய எண்ணங்களிலும் செய்கைகளிலும் எப்பொழுதும் தலையிடுகிறார்கள்.

தீக்ஷாமுறை.

2 10814

# நமது மாற்றுப் பத்திரிகைகளின் விளம்பரம்.

## புதுயுகம்.

இஃது, ஸ்ரீ ஜகத்குருவாம் பரமாசாரிய மூர்த்தியின் அவதார வருகையைப்பற்றி சென்ற 16 வருஷங்களாக உலகமெங்கும் பிரஸித்தப் படுத்தி அவர் நல்வரவை ஜனங்கள் அங்கீகரிக்கும்படி விசேஷப் பிரயத்தனங்களைச் செய்துவரும் உதயதிசை நக்ஷத்திர மஹாஸபையின், தமிழ் மாதாந்தப் பத்திரிகை. இதன் ஆசிரியர், இராவ்ஸாகிப் சு. வி, கனகசபைப் பிள்ளை, வருஷசந்தா ரூ. 1-8-0

E. N. வெங்கடபெருமாள் நாயுடு B. A.,
"புதுயுகம்" ஆபீஸ் கௌரவத் தலைவர்,
பென்ஷன் தாசில்தார், வளையற்காரத் தெரு, ஈரோடு.

---

## நச்சினார்க்கினியன்.

இதில், தொடர்ச்சியாக வெளிவரும் நாவல்கள், நாடகங்கள் வியாசங்கள், மொழிபெயர்ப்புகள் இனிய கவிகள், விநோதக் கூற்றுகள், விடுகதை வினாக்கள் முதலிய பல சிறந்த விஷயங்கள் வெளிவருகின்றன. வருஷ சந்தா ரூ. 2—0—0

பண்டித: ம. கோபாலகிருஷ்ணய்யர்.
"நச்சினார்க்கினிய நிலயம்"
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி

---

## ஆனந்த குணபோதினி.

இஃது, படிப்பவர்களுக்கு நன்னடக்கையும், லௌகீக யுக்தியும் பாஷாஞான சுதேச சிந்தனையும், ஈசுவர பக்தியும், ஆழ்ந்த யோஜனையும் உண்டாகக்கூடிய விதமாய் சொல்நயம், பொருள்நயம் தோன்ற எழுதப்பட்டு வரும் ஓர் உயர்ந்த மாதாந்தப் பத்திரிகை. ஆசிரியர்: திரிசிரபுரம், எஸ். ஜி. இராமானுஜலு நாயுடு, வருஷ சந்தா ரூ. 1—0—0

தி. இராஜகோபால் முதலியார்.
302. தங்கச்சாலைத் தெரு, மதராஸ்.

## தொழிற் கல்வி

நம் நாட்டிற்கு இன்றியமையாத தொழிற் கல்வியைப் புகட்டும் ஓர் சிறந்த மாதாந்தப்பத்திரிகை. ஆசிரியர்: அ. ராமஸ்வாமி அய்யர் மெக்கானிக்கல் இஞ்சினியர். திருவிடைமருதூர் வருஷ சந்தா. ரூ 4—0—0

தொழிற்கல்வி ஆபீஸ்,
திருவிடைமருதூர்.

---

## வைத்திய சந்திரிகை.

வைத்திய விஷயங்களை போதிக்கும் ஓர் உயர்ந்த மாதப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 2—0—0

இதன் ஆசிரியர், பண்டித: S. நாராயண அய்யங்கார்.
"வைத்திய சந்திரிகை" ஆபீஸ், கரூர்.

---

## ஆரம்ப ஆசிரியன்.

சென்னை மாகாண ஆரம்ப ஆசிரியர் மானேஜர்கள் சங்கத்தாரால் வெளியிடப்படும் சிறந்த மாதப்பத்திரிகை. ஆசிரியர்: **M. ஷண்முகஸுந்தர முதலியார். M. A. L. T.** வருஷ சந்தா **ரூ.1—0—0** "ஆரம்பாசிரியன்" ஆபீஸ்.
**200.** தம்புச் செட்டித்தெரு, சென்னை.

---

# "கலிகால தீபம்."

இம் மகுடநாமம் புனைந்த பத்திரிகையொன்று காரைநகர் மாணிக்கவாசக யந்திரசாலையில் இருந்து மாசம் ஒருமுறை பூரணை தோறும் பிரகடனமாகி வருகிறது. இதில் "கலிகால தீபம்" என்ற பெயருக்கேற்ப கலிகாலசம்பந்த விஷயங்களும், சாஸ்திர சமாதானங்களும், கைத்தொழில் விவசாயம் முதலிய அனேக அரிய நல்ல விஷயங்களும் எழுதப்பட்டு வருகின்றன.

### சந்தா விபரம்.

யாழ்ப்பாணம், இலங்கை இந்தியா முதலிய
இடங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூபா 2.
பினாங்கு, சிங்கப்பூர், குவாலலம்பூர் முதலிய
மலாய் நாடுகளுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூபா 3.
தனிப்பிரதி சதம் 20.
மாதிரிக்கொப்பி இனாமாக அனுப்பப்படும்.
தேவையானோர் எமக்கு எழுதிப் பெற்றுக்கொள்க.

விலாசம்:— **மு. சபாரத்தின ஐயர்.**
"கலிகாலதீபம்" பத்திராதிபர்
**காரைநகர், யாழ்ப்பாணம்.**